சமய-சமூக இலக்கிய சஞ்சிகை

ஐப்பசி - மார்கழி 2016

# அலை ஓசை

ISSN 2513 -2547



கிறிஸ்து யேசுவைப் பற்றிய அறிவே
நான் பெறும் ஒப்பற்ற செல்வம். (பிலி 3:8)

50/-

# அலை ஓசை

அலை - 01 ஓசை - 04

சமய–சமூக இலக்கிய சஞ்சிகை

ஐப்பசி - மார்கழி 2016



**ஆசிரியர்:**
அருட்தந்தை றொஹான் பேர்னாட்

**இணை ஆசிரியர்:**
கிறிஸ்டி முருகுப்பிள்ளை

**ஆசிரியர் குழு:**
சூசை எட்வேட்
செ. ஞானராசா
சுரேந்தினி மணிவண்ணன்

**ஆலோசகர்:**
அருட்தந்தை ஏ.ஏ. நவரெட்ணம்

**கணனி எழுத்துருவாக்கம்:**
ஜி.எஸ். ஜோய்சன்

**கணனி வடிவமைப்பு:**
பிரதீபா சந்திரபோஸ்

**வெளியீடு:**
அலை ஓசை கலைத்தொடர்பகம்
திருகோணமலை மறை மாவட்டம்

**முகவரி:**
அலை ஓசை கலைத்தொடர்பகம்
இல.17, புனித அந்தோனியார் வீதி
திருகோணமலை
trincoalaiosai@gmail.com

**பதிப்பகம்:**
ரிங்கோ பிறின்டர்ஸ்
இல 157, மின்சார நிலைய வீதி
திருகோணமலை
026 2228677 - 070 3555 740


## உள்ளே.....


ஆசிரியர் ஓசை ..... 01
நவீன இராகேலின் அழுகுரல்கள் ..... 02
விடியல் எப்போது ..... 05
இன்றைய சிறார்கள் ..... 06
இப்படியும் கொண்டாடலாமே ..... 09
நலம் நாடி ..... 12
அருட்தந்தையர்களை அறிவோமா ..... 15
தேடலும் சாடலும் ..... 20
இளையோர் ஓசை ..... 22
அரசியல் அலசல் ..... 28
திருத்தந்தை செய்திகள் ..... 29
இலக்கிய ஓசை ..... 30
மாணவர் ஓசை ..... 33
மறை மாவட்டச் செய்திகள் ..... 35
புதிர்ப் போட்டி ..... 36



**பிரதியின் விலை ரூ. 50.00 – ஆண்டுச்சந்தா ரூ.300.00** (தபாற் செலவு உட்பட)



ஆக்கங்களுக்குப் பொறுப்பு படைப்பாளிகளே



Alai Osai Cultural Centre, 17, St. Antony's Street, Trincomalee - 026 2220 077



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆசிரியர் ஓசை

## பிறக்க இருக்கும் 2017ம் ஆண்டு சுபீட்சம் நிறைந்ததாக அமைய ஆசிக்கின்றேன்

கணங்கள், நிமிடங்கள், மணித்தியாலங்கள், காலங்கள், உருண்டோடி 365 நாட்கள் கொண்ட ஒரு வருடமே இவ்வளவு விரைவாக சென்று விட்ட பிரமிப்பு எல்லோருக்குமே ஏற்படும் இறுதி மாதம் தான் மார்கழித் திங்கள். மார்கழி மாதம் என்றாலே கொண்டாட்டம் களை கட்டும். அந்த கொண்டாட்டம் இயேசு கிறிஸ்து இம் மண்ணில் உதித்த பெருவிழா. இப் பெருவிழா எம் எல்லோருக்கும் விருந்து படைப்பது மகிழ்ச்சி, அன்பு, இரக்கம், மன்னிப்பு போன்ற பேருவகையாகும்.

பாப்பிறை பிரான்சிஸ் அவர்கள் பிரகடனப்படுத்தி உலகளாவிய ரீதியில் அனைவரது கவனத்தையும் ஈர்த்துக் கொண்டது இரக்கத்தின் ஆண்டு.

இரக்கத்தின் செயற்பாடுகளுக்கு மகுடம் சூட்டியதைப் போன்று பெரும் பல விடயங்களையும் ஆற்றி முன்னுதாரணமாக செயற்பட்டார் என்பதற்கு மாற்றுக் கருத்து இருக்க முடியாது. எமது மறை மாவட்டத்திலும் ஒவ்வொரு பங்கும் தாங்களால் இயன்ற இரக்க செயற்பாடுகளை முன்னெடுத்தன. அலை ஓசை கலைத் தொடர்பகமும் தனக்கே உரிய வகையில் பசு மரத்து ஆணியைப் போல் மக்கள் மனங்களில் பதியும் படி கிராமிய நடனப் போட்டி, மேலைத்தேய நடனப் போட்டி, நவீன நாடகப் போட்டி என்பன நடாத்தி 20.11.2016 அன்று இரக்கத்தின் ஆண்டு நிறைவு விழாவையும் கொண்டாடி மக்கள் மனங்களில் நீங்கா நினைவலைகளை விட்டுச் சென்றது என்பதில் மகிழ்வடைகிறேன்.

2016ம் ஆண்டிலாவது நல்லாட்சி அரசாங்கம் நாட்டிற்கு நல்லதை செய்வார்கள், தீர்வுத் திட்டங்களை முன் வைப்பார்கள், இராணுவ இறுக்கங்களை தளர்த்துவார்கள், காணிகளை முற்றாக விடுவிப்பார்கள், போதை வஸ்துப் பாவனையை தடுப்பார்கள், அரசியல் பழிவாங்கல்களை நிறுத்துவார்கள், அரசியல் கைதிகளை விடுவிப்பார்கள், கடத்தல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும், சிறுவர் துஷ்பிரயோகங்கள், பெண்களுக்கான பாலியல் வன் கொர்டுமைகள் இல்லாதொழிக்கப்படும் போன்ற பல எதிர்பார்ப்புக்கள் அனைத்தும் நீர்க்குமிழிகளாகி விட்டன.

திருகோணமலை மறை மாவட்ட மேய்ப்புப்பணி மாநாடு கடந்த 26.11.2016 அன்று நடைபெற்றது. மாநாட்டின் இறுதியில் 2017ம் ஆண்டிற்கான செயற்பாடுகள் எவ்வாறு அமைய வேண்டும் என்ற ஆயரின் சிந்தனைக் கேற்ப "புனித ஜோசப்வாஸ் ஆண்டு 2017 நற்செய்தி அவர் பணியும் நம் வாழ்வும்" என தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆகவே இரக்கத்தின் ஆண்டு நிறைவுக்கு வந்தாலும் இரக்க செயற்பாடுகள் தொடர வேண்டும் என்பதை மனதில் பதிய வைத்திருப்பதைப் போல, 2017ம் ஆண்டில் மேற்கொள்ள இருக்கும் மறை மாவட்டத்தின் திட்டங்களிலும் முழு மூச்சோடு செயற்பட்டு 2017ம் ஆண்டு அனைவருக்கும் பயனளிப்பதாக அமைய வழி சமைப்போம்.

அலை ஓசையின் வாசகப் பெருமக்கள் அபிமானிகள், அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு பெருவிழா வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு பிறக்க இருக்கும் 2017ம் ஆண்டு சுபீட்சம் நிறைந்ததாக அமைய ஆசிக்கின்றேன்.

- ஆசிரியர் -

ஞானம் பவளத்தை விட விலை மதிப்புள்ளது: உன் அரும் பொருள் எதுவும் அதற்கு நிகராகாது...
– நீதி மொழிகள் 3:15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருட்பணி அ. அ. நவரெத்தினம்
முதுநிலை விரிவுரையாளர்,
கிறிஸ்தவத்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்

# நவீன இராகேலின் அழுகுரல்கள்

## முன்னுரை

கடந்த கார்த்திகைத் திங்கள் 27ம் நாளுடன் (27.11.2016), ஆரம்பித்த திருவருகைக் காலத்தின் முதலாம் ஞாயிறுடன் கத்தோலிக்க திருமறையில் புதியதொரு திருவழிபாட்டு ஆண்டு ஆரம்பமாகியது (2016/2017). இத்திருவழிபாட்டு ஆண்டானது மூன்று ஆண்டுகளை உள்ளடக்கிய திருவழிபாட்டு நாட்காட்டியின் முதலாம் ஆண்டினை மையப்படுத்தியதாகும். இவ்வாண்டின் பொதுக்காலத்தினதும், தவக்காலத்தின் முதல் இரு வாரங்களினதும் நற்செய்தி இறைவார்த்தை மத்தேயு நற்செய்தியிலிருந்து எடுக்கப்படுகின்றது.

மறுபக்கத்தில் அகிலத் திருச்சபை இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டினை கடந்த திருவழிபாட்டு ஆண்டில் கொண்டாடி பூர்த்தி செய்துள்ளது. மலர்ந்துள்ள புதிய திருவழிபாட்டு ஆண்டினை இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையானது இலங்கையின் திருத்தூதர் தூய யோசப்வாஸ் அடிகளாரின் ஆண்டாக பிரகடனம் செய்துள்ளது. அதனோடு இணைந்து திருகோணமலை மறை மாவட்டமானது திருத்தந்தை பிரான்சீஸ் அவர்களின் "அன்பின் மகிழ்ச்சி" எனும் குடும்ப அன்பு பற்றிய திருத்தூது ஊக்கவுரையை அடியொற்றி குடும்ப ஆண்டாகவும், திருவழிபாட்டு ஆண்டினை அடியொற்றி மத்தேயு நற்செய்தி ஆண்டாகவும் பிரகடனம் செய்து அம்மூன்று விடயங்களையும் சிந்திக்கவுள்ளது.

அதனடிப்படையில், கிறிஸ்து பிறப்புக் காலத்தில் இருக்கும் நமக்கு, கிறிஸ்துவின் பிறப்பும் அதனோடு இணைந்த சம்பவங்களைத் திரட்டித் தருகின்ற நற்செய்திகளாக மத்தேயும், லூக்காவும் காணப்படுகின்றன. ஆயினும் அவ்விரு நற்செய்திகளிலும் காணப்படுகின்ற சம்பவங்கள் ஒத்ததாக காணப்படவில்லை. இருவரும் இயேசுவின் பிறப்பினை வெவ்வேறு கோணங்களில் நோக்குகின்றார்கள். அவ்வாறு நோக்குவதற்கான காரணம், நற்செய்தியாளர்களுக்கிடையில் காணப்பட்ட தனித்துவமான நோக்கமும், பண்புமாகும். அந்த வகையில் இக்கட்டுரையானது இயேசுவின் பிறப்புக்குறித்த சம்பவங்களுள் ஒன்றாகிய ஏரோது மன்னன் குழந்தைகளை படுகொலை (மத் 2:13-18) செய்கின்ற சம்பவத்தை விவிலியப் பின்னணியில் வாசகர்களுக்கு அறிமுகம் செய்வதேயாகும்.

**விவிலியப் பகுதி : குழந்தைகள் படுகொலை - மத் 2: 13 - 18**

**விவிலிய விளக்கம்:**

முதலில் ஏரோது மன்னன் கிழக்கிலிருந்து வந்த ஞானிகள் 'யூதர்களின் அரசராகப் பிறந்திருக்கின்றவர் எங்கே? அவரது விண்மீன் எழக் கண்டோம். அவரை வணங்க வந்திருக்கின்றோம்' என்று கூறியதைக் கேட்டபோது கலங்கினான். அவர்களோடு ஜெருசலேம் முழுவதும் கலங்கிற்று (மத் 2:1-4). அதன் பின்பு ஞானிகள் தன்னை ஏமாற்றியதை உணர்ந்த ஏரோது மன்னன் மிகுந்த சீற்றம் கொண்டான் (2/16). இடையில் குழந்தை இயேசுவும், தாய் மரியாவும், யோசேப்பும் எகிப்துக்கு தப்பியோடினார்கள். இதற்கு காரணம், குழந்தையைக் கொல்ல ஏரோது தேடுகின்றான், பாதுகாப்பாக இருக்க எகிப்துக்கு செல்லும்படி ஆண்டவரின் தூதரால் யோசேப்பு அறிவுறுத்தப்பட்டார். அறிவுறுத்தலின் பிரகாரம் அவர்கள் எகிப்தில் தங்கியிருந்தார்கள் (2/13-15). தான் ஏமாற்றப்பட்டதால் சீற்றமடைந்த ஏரோது மன்னன் குழந்தை இயேசுவைக் கொலை செய்யத் தேடி பெத்தலகேமிலும் அதன் சுற்றுப்புறமெங்கும் ஆட்களை அனுப்பி இரண்டு வயதும் அதற்கு உட்பட்டவையுமான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா ஆண் குழந்தைகளையும் கொன்றான் (2/16) என்று மத்தேயு நற்செய்தியாளர் குறிப்பிடுகின்றார்.

இச்சம்பவத்தைக் குறித்து நோக்குகின்ற போது யூத, பாலஸ்தீன வரலாற்றினையும் பற்றி எழுதிய யோசேப்புல் என்கின்ற யூத வரலாற்றாசிரியர், மத்தேயு நற்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள குழந்தைகள் படுகொலை பற்றி எந்தவொரு விடயத்தையும் தனது வரலாற்று நூலில் குறிப்பிடவில்லை. அப்படியானால் இச்சம்பவத்தை எவ்வாறு அணுகுவது? அன்றைய நூல்களை ஆராய்ந்து பார்த்தால் இக்கொலைகள் நடைபெற்றிருக்கலாம், காரணம், தனது பட்டம், பதவி போன்றவற்றைத் தக்க வைப்பதற்காக எதையும் செய்யும் துணிவு கொண்டவன் ஏரோது மன்னன். நினைத்த அளவில் தனது தாய், மனைவி, பிள்ளைகளைக்கூட கொன்றவன். எனவே தனது பதவிக்கு ஆபத்தாக பிறந்த இயேசுவை கொல்வதற்காக அக்கிராமத்தில் (பெத்தலகேமில்) பிறந்த குழந்தைகளை கொன்றிருப்பான் என்று எண்ணுவதில் தவறில்லை.

மறுபக்கத்தில், ஏரோது மன்னனின் கலக்கத்திற்கு காரணமாயிருந்த குழந்தையின் இடம் தெரிந்த பின்பும், குழந்தையை தப்பிக்க அவன் விட்டுவிட்டான் என்பதையோ, அதுவும் சூழ்ச்சியுடைய அவன் ஏமாந்தான் என்பதையோ ஏற்றுக் கொள்ள கடினமாகவே உள்ளது. ஆயினும் மத்தேயு நற்செய்தியாளர் வரலாற்றுக்கு முக்கியத்துவம் அளிக்காமல், அன்று இஸ்ரயேல் மக்கள் எகிப்தில் பாரவோனின் அடிமைத் தனத்திலிருந்தபோது அவன் இஸ்ரயேல் மக்களின் ஆண் குழந்தைகளை கொன்ற சம்பவத்துடன் தொடர்புபடுத்தி நினைவு கூர்கின்றார் என்று கருதும் அறிஞர்களும் உள்ளார்கள் (விப 1-2). அத்துடன் இஸ்ரயேல் மக்கள் அசீரியாவிலும், பாபிலோனியாவிலும் அடிமைகளாக வாழ்ந்தபோது அனுபவித்த வேதனைகளையும் மத்தேயு இங்கே நினைவூட்டுகின்றார். ஏனெனில் அவர்களது அடிமைத்தனமும் இரண்டாவது விடுதலைப் பயணமாக இஸ்ரயேல் மக்களால் கருதப்பட்டது (எசா 40.:.3, 52.:.3-6). ஆகவே இங்கு மத்தேயு நற்செய்தியாளர் வரலாற்றுக்கு முக்கியத்துவம் தருவதை விடுத்து, தாம் புகுத்த விரும்பிய விடுதலைப் பயணம் கருத்திற்கு முதலிடம் தருகின்றார்.

அடுத்து வருகின்ற 17-18ம் வசனங்களில் மத்தேயு நற்செய்தியாளர் ஏரெமியா இறைவாக்கினரின் சொற்றொடர்களை எடுத்துக் கையாள்கின்றார். மாசில்லாக் குழந்தைகளின் கொலை பெத்தலகேமில் நடைபெற்றதாக நற்செய்தியாளர் குறிப்பிடுகின்றார். யாக்கோபுவின் மனைவி இராகேல் புதைக்கப்பட்டது பெத்தலகேமிற்கு செல்லும் வழியில்தான். இவள் வடகோத்திர இஸ்ரயேல் குலங்களுக்கு அடையாள அன்னையாக இருக்கின்றாள். கி.மு 722இல் வட அரசு அசீரியர்களால் கைப்பற்றப்பட்டு அங்கிருந்தவர்கள் அசீரியாவுக்கு நாடு கடத்தப்பட்டார்கள். தம் பிள்ளைகளின் இழிவையும், அழிவையும் குறித்து ராமாவில் இராகேல் அழுததாக அடையாள மொழியினை பயன்படுத்துகின்றார் ஏரோமியா இறைவாக்கினர் (ஏரே 31/15). அதே இராகேலின் அழுகை மீண்டும் மாசில்லாக் குழந்தைகளின் கொலையில் நிறைவேறுவதாக மத்தேயு நற்செய்தியாளர் கூறும் போது அத்தகைய விடுதலைப் பயணத்தில் இக்குழந்தைகளின் தாய்மார்கள் பெற்ற வேதனையை நினைவு கூருகின்றார்.

**இன்றைய செய்தி:**

மன்னனின் முதன்மைப் பணிகளுள் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களுக்கு நல்லாட்சி வழங்குவது, மக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவது. இங்கே ஏரோது மன்னனும் சரி அவனது செயலுடன் தொடர்புபட்ட எகிப்திய பாரவோன் மன்னனும் சரி தமது ஆட்சியின் கீழ் வாழ்ந்த (அடிமைகளாயினும்) மக்களை அதுவும் மாசில்லாத குழந்தைகளை ஈவிரக்கமின்றி கொன்றார்கள். அவர்களது கொலை அவர்களின் பெற்றோரை துக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாகரத்தில் தோய்த்தது. இன்றும் கூட குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளும், கொலைவெறித் தாக்குதலும் தொடர்ந்த வண்ண-மேயுள்ளன. நமது நாட்டிலேயே ஆட்சியாளர்களால் பாதுகாக்க-ப்பட வேண்டிய குழந்தைகள் குண்டுமழை மொழியப்பட்டும், துப்பாக்கி ரவைகளுக்கு இரை-யாகியும், கொடிய எறிகணைத் தாக்குதலுக்குள்ளாகியும், கொலை செய்யப்பட்டார்கள். இன்னும் போதிய மருத்துவ வசதிகள் மறுக்கப்பட்டு குற்றுயிராய் மடிந்து போனார்கள். இங்கு காக்க வேண்டியவர்கள் காக்கத் தவறினார்கள். வேலியே பயிரை மேய்ந்த கதையாக மாறியது. இதுவொரு வகையான குழந்தைகளுக்கு எதிரான அடக்கு முறைகளும், ஒடுக்குமுறை-களுமாகும்.

மறுபக்கம், கருவில் வளரும் குழந்தை தரணிக்கு வந்திடாமல் செய்கின்ற கருக்-கலைப்பெனும் உயிர்க் கொலைகள் நாளாந்தம் எங்கும் நடக்கின்றன. அவ்வாறு உயிர் தப்பி பிறந்து விட்டாலும், இன்றைய சமூதாயத்தில் குழந்தைகளுக்கு, சிறார்களுக்கு எதிரான வன்முறைகள் சொல்லில் அடங்காதவை. ஒருபுறம் அவர்களுக்கு எதிராக வீட்டு வன்முறைகள், இன்னொருபுறம், சிறுவர்களை தொழிலுக்கமர்த்துவது, மறுபுறம் அவர்களது கல்வியினை தடைசெய்வது. இவற்றோடு மட்டும் நின்று விட்டால் பறவாயில்லை, அதனைவிட இன்னும் அசிங்கமாக உல்லாசத்துறை வளர்ச்சி எனும் போர்வையில் சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்கள், சிறுவர் பாலியல் வன்கொடுமைகள், பெண்குழந்தைகள், சிறுமியர்களுக்கு எதிரான பாலியல் வன்புணர்ச்சி கலாசாரம் என்று சொல்லி மாள முடியாத அளவிற்கு தொல்லைகளையும், தொந்தரவுகளையும் அவர்கள் நாளாந்தம் சந்திக்கின்றா-ர்கள். இவர்கள்தான் நவீன இராகேலின் அழகுரல்கள். இழந்த தன் குழந்தைகளுக்காக, சிறுவர்களுக்காக, தொலைக்கப்பட்ட தமது பிள்ளைகளுக்காக ஏக்கத்-துடன் ஆறுதல் கொள்ள முடியாமல் பெற்றோர்கள் அழுகின்றார்கள். அவர்களின் கண்ணீரைத் துடைப்பவர் யார்? இவர்களுக்கு ஆறுதல் ஊட்டுபவர் யார்?

**முடிவுரை:**

கிறிஸ்து பிறப்புப் பெருவிழா வெறுமனே மகிழ்ச்சியைத் தருவது மட்டுமல்ல, அல்லது மகிழ்ச்சியைப் பகிர்வது மட்டும் கிடையாது, மாறாக அடுத்தவர் கண்ணீரைத் துடைப்பதும் ஆகும். நாம் மட்டும் மகிழ்ந்திருக்க கிறிஸ்மஸ் விழாவென்றால் அப்படியொரு விழா கிறிஸ்தவர்-களுக்கு தேவைதானா? அடுத்தவர் கண்ணீத் துடைத்து, அவர்களையும் மகிழ்வித்து கொண்டாதுவதுதானே உண்மையான கிறிஸ்மஸ் விழா. எனவே, நம்மத்தியில் அழுகின்ற, கண்ணீரோடு வாழ்கின்ற குழந்தை-களின், சிறார்களின் கண்ணீர் இந்தக் கிறிஸ்மஸ் பெருவிழாவில் துடைப்-போம். அவர்களுக்கு புதுவாழ்வு கொடுப்போம், அவர்களின் நல் வாழ்க்கை, பாதுகாப்பிற்காக, அனைவரும் கைகோர்ப்போம்.

**குழந்தை இயேசுவின் மகிழ்ச்சி அனைவரிலும் பெருகட்டும்.**

◆◆◆ ◆◆◆



**சந்தேகப்பாப்பாவும் சங்கேதத்தாத்தாவும்**

"வன்மம் என்றால் என்ன தாத்தா ?"

"எதிர்பார்த்தது கிடைக்காமல் ஏமாறும் போது எதேச்சையாக விதைத்து விட்ட நச்சு விதை அவரும் இவரும் ஒன்றாகினாலும் விதைத்தது விருட்சமாகிவிடும் மகளே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தர விடியல் தோன்றும்



அருட்பாவலர் நிலா தமிழின்தாசன்



இச்செகம் தன்னை மீட்க
எழுந்தருளுற்ற இயேசு
பச்சைமண், பசிய மேனிப்
பகலவன் தொழுவந் தன்னில்
பிச்சையர் மகவைப் போன்று
பிறந்தனன் உலக ஜோதி !
நிச்சயம் ஏழையர்க்கு
நிரந்தர விடியல் தோன்றும்

ஏரோதின் வழிவந் தோர்கள்
இரக்கமே இல்லா நீசர்
பாராளும் ஆசை கொண்டு
பசா சென அலைகின்றார்கள்.
தீராத மோகம் நெஞ்சில்
தினமிவர் சுமப்பர் வஞ்சம்
வாராது வந்த பலன்
வரவினால் மலர்ச்சி தோன்றும்

வறுமையின் தாக்கம், வாழ்வில்
வந்துற்ற பிணியின் தாக்கம்
உறுபசியோடு வீணர்
உறுத்தலால் உள்ளத்தில் வாட்டம்
வெறி கொண்டு நல்லோர் மீது
வீண்பழி சுமத்தும் தீமை
அறுபட்டு அனைவோர் வாழ்வும்
அமைதியால் செழித்து ஓங்கும்.

## இத்தாலியப் பழமொழிகள்

- அழகிக்கு கணவன், அவள் பிறக்கும் போதே அமைந்திருப்பான்.
- யுத்தத்தைப் பற்றிய பயம்தான் யுத்தத்தை விட மோசமானது.
- உப்பையும், ஆலோசனையையும் கேட்டால்தான் கொடுக்க வேண்டும்.
- திராட்சைத் தோட்டத்திற்கு தேவை, உழைக்கும் கரங்கள்; பிரார்த்தனை மட்டும் அன்று.
- வண்டிக்கு எண்ணெய் விட்டவன், தன் மாட்டிற்கு உதவி செய்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய சிறார்கள் ...
# இளம் தலைவர்கள் ...



திருமதி. ஜெயவதனி மரியதாஸ்



சிறுவர்களின் உரிமைகள் இன்றல்ல, நேற்றல்ல, என்றோ, எப்போதோ மறுக்கப்பட்டு, மறக்கப்பட்டு ஏட்டளவிலே எழுதப்பட்டதாக இருந்து வந்துள்ள போதும், தற்கால விழிப்படைந்த சமூகத்தினால்தான் விவேகமானதாக யோசிக்கப்பட்டு, வாசிக்கக் கூடியதாக, வழக்காடும் நிகழ்வுகளாகி நிற்கின்றன. இருந்தபோதும் ஒருசில இடங்களில் சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்யும் சம்பவங்கள் வெளியாகாமலும், பல்வேறு காரணங்களால் மறைக்கப்படுவதும் உண்மை தான்.

எம் அன்றாட வாழ்க்கை நிகழ்வுகளில் பிள்ளைகளை குடும்பம், பாடசாலை, சமூகங்களில், நடத்தும் விதம் கவலைக்குரியதாக இருக்கின்றது. இவற்றைக் கண்டும் காணாதது போலிராது, அதற்கான மாற்று நடவடிக்கைகளை மேற்கொண்டு, அவர்களையும் மனித நேயத்துடன் நோக்க வேண்டும். எல்லாப் பிள்ளைகளையும் சமமாக நடத்தும் தன்மை இன்று இல்லாமல் போகின்றது என்றே சொல்லலாம். சிறுவர்களிடையே பாரபட்சம், பாகுபாடு, வேற்றுமை, ஒப்பிட்டுக் கூறல் போன்ற விடயங்களைத் தவிர்த்து எல்லோரையும் சமமாக பார்க்கும் தன்மை பரந்து விரிந்திட வேண்டும்.

அறிவாளி, அறிவிலி, அநாதை, அகதி, அதிஸ்டம் அற்றவன், கோழை, வீரன், வசதியானவன், வறியவன், நோயாளி, பட்டணத்தான், பட்டிக்காட்டான், என்ற பாகுபாடுகள் களையப்பட்டு, சாதி சமய, இன, மொழி வேறுபாடுகள் வெறுக்கப்பட்டு, நறுக்கப்பட்டு பெற்றோர், பெரியோர் பொறுப்பாகி நின்றால் சிறார்கள் வாழ்வு சிறப்பாகிவிடும்; சீரழிய இடமேற்படாது.

சமூக மேம்பாட்டிற்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் கல்வி இன்றியமையாதது. இந்த இலட்சியங்களைக் கருத்திற் கொண்டே கல்வித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. கல்வியின் இலக்கு பிள்ளையின் ஆளுமை, திறமைகள், உடல் மற்றும் உளம் சார்ந்த ஆற்றல்களை முழுமையாக பரிணமிக்கச் செய்தலாகும். கல்வி கற்பதற்கான உரிமையுடைய சிறார்கள் ஆரோக்கியமாக வாழும் உரிமையையும் உடையவர்கள். "சீரான கல்வி நல்லாரோக்கியத்திற்கு ஆதாரமாவது போல, நல்லாரோக்கியம் சீரான கல்விக்கு ஆதாரமாகிறது."

ஆரோக்கியம் அற்ற பிள்ளைகள் கல்வியை இழக்கின்ற வாய்ப்புக்கள் அதிகமாகவுள்ளன. உடல், உள, சமூக ரீதியாக ஆரோக்கியமற்ற பிள்ளைகளை இனங்கண்டு உரிய சிகிச்சையளித்தல் வேண்டும். இவ்வாறானவர்களுக்கு ஊட்டச் சத்துள்ள உணவுகளளித்தல், தடுப்பு மருந்தேற்றல், பரிசோதித்தல், பாலியல், எயிட்ஸ், தொற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவராகும் சிறார்கள்

நோய்களுக்குட்படாது பாதுகாத்தல், சுகாதார ஆலோசனைகளை பெற்றுக் கொடுத்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளித்தால் சிறார்கள் வாழ்வு சீராகிடும். கால வரையறையற்ற கல்வியை போர், பஞ்ச, அனர்த்த, உழைக்கின்ற நோயால் நொந்திருக்கின்ற சமயங்களிலும் புத்திசாதுரியத்துடன் கற்று, எதிர்காலத்தை ஏற்றம் பெறச் செய்ய எல்லோரும் ஒத்துழைப்போம்.

சிறுவர்களின் உடல், உள வளர்ச்சியிலே விளையாட்டு அவசியமானதாக இருப்பதால் ஓய்வு நேரத்தை உரிய முறையில் பயன்படுத்தி சமூக, அறிவுத்துறை மேம்பாட்டிற்கு அவசியமாக்கிடுவோம். குழுவாக விளையாடும் போது புரிந்துணர்வு, பொறுமை, மன்னிப்பு, உதவுதல் போன்ற எத்தனையோ நற்பண்புகளை வளர்த்து, நல்லுறவுகளை விரிவாக்க முடியும். எந்நேரமும் ''படி படி'' என்று தொல்லை கொடுக்காது,. பிள்ளைகளது உளக் கோளாறுகளை அழித்திடும் அருமருந்தான விளையாட்டுக்கும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்திட வேண்டும்.

புத்தகப் படிப்பு, மேலதிக வகுப்புக்கள் (டியூசன்) என்று நின்று விடாமல், தொடர்பாடல் ஊடகங்களுடன் தொடர்பை ஏற்படுத்தி மொழியை விருத்தி செய்தல், கற்பனையை வளர்த்தல், தகவல்களை அறிதல், கலை நிகழ்வுகளை பார்வையிடல் மூலம் உடல், உள, சமூக, ஆன்மீக ரீதியாக வளர்ச்சியும், உயர்ச்சியும், முதிர்ச்சியும் அடைந்திட சிறியவர்களுக்கு வழிகாட்டிகளாகத் திகழ்வோர் வழிசமைத்துக் கொடுத்திட வேண்டும். இன்று எத்தனையோ செல்வந்தச் செருக்குடையோர், சிறுவர்களது உரிமைகளை உதாசீனப்படுத்தி, வேலைக்கமர்த்தி அடிமைப்படுத்துகின்றனர். பொருளாதார ரீதியில் தரமுயர வேண்டும் என்பதற்காக பிள்ளைப்பருவத்தினை பயன்படுத்தும் பக்குவமற்றவர்களுக்கு, முடிவு கட்ட முதிர்ச்சியடைந்தோர் முன் சென்றிட வேண்டும். இவ்வாறு சிறார்களை அடிமைப்படுத்தும் இடங்களில் எத்தனையோ வன்முறைகளால் வதைக்கப்பட்டு, நசுக்கப்பட்டு, நாசமாகின்ற நாளைய தலைமுறையினர் இன்றும் இல்லாமல் இல்லை.



''சிறு அல்லது இள வயதுக் குற்றவாளிகள் உருவாக்கப்படுகின்றார்கள், அவர்கள் பிறப்பதில்லை'' பெரும்பாலான சிறார்கள் அன்பை, ஆதரவை, பாதுகாப்பை இழந்ததால் குற்றவாளிகளாக்கப்படுகிறார்கள். இவர்களுக்கு நீதி வழங்கும் போது சிறுவர்களது உரிமைகளை மதித்து, நல்வழிக்குத் திருப்பி, மானிடப் பிறவிக்குக் கொடுக்க வேண்டிய கௌரவத்துடன் நடத்துதல் மூத்தோரின் கரிசனையுடன் கூடிய கடமையும் பொறுப்புமாகும். இவை மட்டுமன்றி துர்நடத்தையுடைய பெற்றோரின் பிள்ளைகள் வாழ்வால், வார்த்தைகளால் நல்லொழுக்கமுடையவர்களாக இருக்கின்ற போதும், அவர்களை ஒதுக்கி ஓரங்கட்டி ஏற்க மறுக்கின்ற எம்மவர்களை என்ன தான் செய்ய முடியும்? 'சிறை வாசிகளின் பிள்ளைகளுக்கு குருதியில் குற்றம் கலந்திருக்கிறது' என்று சீன நாட்டிலே கூறப்படும் குற்றச்சாட்டை நம்மவரும் அடியொற்றாது, அடியோடு அழித்தொழிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைவராகும் சிறார்கள்

'இன்றைய சிறார்கள் நாளைய தலைவர்கள்' என்ற பழமை வாக்கு மறைந்து, 'இன்றைய சிறார்கள் இன்றைய தலைவர்கள்' என்ற புதுமையான வாக்கு எம் மத்தியில் பிள்ளைகளின் கருத்துக்களுக்கு மதிப்பளிப்பதுடன், கலந்துரையாடல்களில் அவர்களின் வார்த்தைகளைச் செவிமெடுத்திட வேண்டும். வீட்டில், வகுப்பறைகளில், கூட்டங்களில் மாணவர்களை அடக்கி அமரச் செய்யாது அவர்களின் பெறுமதியுள்ள, புகழத்தக்க, புரட்சிமிக்க கருத்துக்களுக்கு முன்னுரிமை கொடுப்பதுடன், அவர்களின் அச்ச உணர்வை, தாழ்வு மனப்பான்மையை நீக்கிட முன்வருவோம்.

சிறார்களே சிந்தியுங்கள்.....! உங்களுக்கான உரிமைகளில் இருந்தே மனித உரிமைகைள் ஆரம்பமாகின்றன. சிறுவர்களாகிய உங்களது நான்கு பிரதானமான உரிமைகள்:-

01. வாழ்வதற்கான உரிமை
02. பாதுகாப்பதற்கான உரிமை
03. அபிவிருத்திக்கான உரிமை
04.பங்குபற்றுதலுக்கான உரிமை

இவற்றுக்குள் அடங்குவதே மேலே நாம் குறிப்பிட்டுக் கூறியுள்ள மேலதிக உங்களுக்கான உரிமைகளாகும். வறுமை உங்களை வாட்டலாம், நோய்களால் நீங்கள் நொந்து போகலாம், கல்வி கற்கும் இடங்களில் நீதி நிராகரிக்கப்படலாம், உங்களது விசேட தேவைகள் கவனிக்கப்படாதிருக்கலாம், போர்ச்சூழல்கள் உங்கள் வாழ்வைப் போர்க்களமாக்கியிருக்கலாம், போதைப் பொருட்களுக்கு அடிமையாகும் நிலைகள் வரலாம், உழைப்பாளிகளாக உட்படுத்தப்பட்டிருக்கலாம். இவ்வாறான நிலைமைகளிலும் உங்கள் வளர்ச்சியில் தளர்ச்சியைத் தவிர்த்து தன்னம்பிக்கையுடன், உரியவர்களிடம் உதவி பெற்று வாழ்வை வளப்படுத்துங்கள்.



- முற்றும் -

## நன்மைகள் கொண்ட மாதுளை

### மாதுளையின் நன்மை

மாதுளைச் சாறு மூப்படைவதுடன் தொடர்புடைய மூளை ஆற்றல் குறைதலுக்கு எதிரான பாதுகாப்பைத் தருவதுடன், மறதி நோயைத் தடுக்கவும் உதவுகிறது.



கருவுற்ற பெண்கள் அருந்தி வந்தால் பிறக்கும் குழந்தையின் மூளையையும் பாதுகாக்கும். மாதுளைச் சாறு குடலில் நன்மை செய்யும். பேதியைக் கட்டுப்படுத்தும். குடல் அழற்சியை எதிர்க்கும். மாதுளையை மென்று தின்ற பின் கடைசியில் தங்கும் கடின சக்கைப் பொருள் சமிபாடடைவதில்லை.

எனவே அதனை விழுங்க வேண்டியதில்லை.

நன்றி – நல்வழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இப்படியும் கொண்டாடலாமே...!

சூசை எட்வேட்

இருதயநேசன் முன் கூடத்தில் இருந்து பத்திரிகை படித்துக் கொண்டிருந்தார். பத்திரிகையை பார்த்துக் கொண்டிருந்தாராயினும், அவர் மனம் அதில் நிலை கொள்ளவில்லை. எழுத்துக்களில் மேய்வதும், சுவர் மணிக்கூட்டைப் பார்ப்பதும், தெருப்படலையை நோக்கமிடுவதுமாக இருந்தன அவர் விழிகள். மனம் பரிதவித்துக் கொண்டிருந்தது...... விடியற்காலை ஐந்து மணிக்கே வெளிக்கிட்டுப் போனாளே ஆசுபத்திரிக்கு நேரம் பன்னிரெண்டையும் தாண்டியிற்றுதே, இன்னும் வரவில்லையே.... வழக்கமாக மருந்தெடுக்கப் போனால் பன்னிரெண்டுக்கு முதல் வந்திருவாளே, சமையல் சாப்பாடெல்லாம் நடக்குமே. இண்டைக்கு என்னவும் நடந்திருக்குமோ.... இப்படியாக பலப்பல எண்ணி அங்கலாய்த்துக் கொண்டிருக்கும் போது தான் தெருக் கதவு திறக்கும் சத்தம் கேட்டது. மனைவி அந்தோனியம்மாதான் குடையை மடித்துக் கொண்டு சுருங்கிய முகத்தோடு வந்து கொண்டிருந்தாள். இவருக்கு மனம் ஆறுதல் கண்டது.

அந்தோனியம்மா உடுப்புக்களை களையாமலேயே படுக்கையில் சாய்ந்து விட்டாள். இருதயநேசன் போய் எட்டிப் பார்த்தார். நல்ல களை போலும், மனக்களையும் தான்... பரிவுடன் கேட்டார்: "என்னப்பா என்ன நடந்தது? ஏன் நேரம் செண்டது?" அவள் பதில் சலிப்போடு வெளிவந்தது: "இண்டைக்கு வேளைக்கு பஸ் கிடைக்க இல்ல, ஆசுபத்திரிக்குப் போக பிந்திப் போச்சுது. நம்பர் நூறையும் தாண்டிற்றுது! அதுதான் நேரம் செண்டது" சொல்லி விட்டு மற்ற வளமாக திரும்பி படுத்துக் கொண்டாள். இவர் மனைவிக்கு தொல்லை கொடுக்கக் கூடாது நிம்மதியாகக் கிடக்கட்டும் என்று, சட்டையைப் போட்டுக் கொண்டு சாப்பாட்டுக் கடைக்குப் போய் விட்டார்.... இவர் மனைவி இரத்த அழுத்த (பிறஸர்) வியாதியால் மிகவும் உத்தரித்தவள் அரசாங்க மருத்துவ மனையில் காட்டிய பின்பு வருத்தம் ஒரு கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது என்ன. மாதா மாதம் வைத்தியமனைக்கு அவர்கள் தந்த அட்டையோடு போய் காட்டி பரிசோதித்து மருந்தெடுப்பதை ஒழுங்காகச் செய்ய வேண்டும். அப்போது தான் வருத்தம் உரக்காமல் அமைதியாக இருக்கும்.

கடையிலிருந்து கொண்டு வந்த சாப்பாட்டை சாப்பிட்டபின் சிறிது நேரத்தில் தன் களை எல்லாம் தீர்ந்த பின் அந்தோனியம்மா கூடத்துள் வந்து கணவன் முன் அமர்ந்தாள். மருத்துவமனையில் நடந்த நெருக்குவாரங்களை, அவஸ்தைகளை எல்லாம் கதையாக அளந்தாள். இந்தக் கதைகளைக் கேட்டு இருதயநேசன் தனக்குள் சிரித்துக் கொண்டார். அவர் பல பத்திரிகைகள், சஞ்சிகைகள் படிப்பவர். உலக ஞானம் உண்டு. எதற்கும் விளக்கம் சொல்லக் கூடியவர். அவர் சுருக்கமாகச் சொன்னார். "எத்தன வைத்தியர்மார், தாதிமார் தொழில் செய்யுறாங்கள், இவங்களுக்கெல்லாம் ஆயுள் பூராவும் சம்பளம் கொடுக்க வேணும். இன்னும் மருத்துவராக, தாதியாக படிச்சுக் கொண்டு, பயிற்சி எடுத்துக் கொண்டு எத்தனையாயிரம் பேர் இருக்கிறாங்கள். அவங்களுக்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கெல்லாம் வேல வேணும்.... வெளிநாடுகளில எத்தின மருந்துக் கொம்பனிகள் இருக்குது தெரியுமா? அதை நம்பி ஊழியர்கள், விற்பனை முகவர்கள் இருக்கிறார்கள் தெரியுமா?.... எல்லாருக்கும் தொழில் வேணும்; வருமானம் வேணும்; சம்பளம் வேணும். ஆகையால் வருத்தக்காரர் காலம் முழுக்க இருந்தே ஆக வேணும். வருத்தமெல்லாம் சுகமாப் போனா, இத்தனை பேர்ர பிழைப்பு, வருமானம் என்னா-கிறது? "எல்லாம் பிஸ்னஸ். வியாபாரப் போட்டியில் தான் எல்லாம் நடக்கிறது. மனிதா-பிமான ரீதியில் ஒண்டுமே நடப்பதில்லை"

அவர் கூறியவை எல்லாம் அந்தோனியம்மாவுக்கு விளங்கியதோ இல்லையோ, அவள் இப்படிப் பிரலாபித்தாள்.... 'வருத்தத்தால மட்டுமா உத்தரிக்-கிறம்? செலவுக்கு போதாம கடன், கஸ்டத்தாலயும் தான் உத்தரிக்கிறம். அயலல இருக்கிறதுகள் எங்களிட்ட இருந்து வறுகத்தான் பாக்கிறா-ங்களே அல்லாமல் உதவுற ஆக்களா இல்ல..... நாங்களும் நெடுகிலும் கோவிலுக்குப் போறம் தான்; மன்றாடுறம் தான் கோயில் கடமை எல்லாம் நிறைவேற்றுறம் தான். ஒரு பலனும் இல்ல பிரயோசனமும் இல்ல' என்று கூறி விட்டு எழுந்திருக்கப் போன போது வெளிப்-படலையைத் தட்டி கூப்பிடும் சத்தம் கேட்டது:

"அம்மா.. இந்த ஏழைக்கு உதவுங்கோ! ஐயா... அம்மா..." அவன் சொன்னதையே திரும்ப திரும்ப சொல்லிக் கொண்டிரு-ந்தான். அந்தோனியம்மா வேகமாக எழும்பிப் போய் வாயிலைத் திறந்தாள். போன வேகம் என்ன நடக்கும் என்பதையும் பறைசாற்றியது. "ஆரப்பா நீ? இப்ப உனக்கு என்ன வேணும்?" "அம்மா, நான் மூதூரில இருந்தனான். அந்தச் சண்டையில எங்கட இருப்பிட-மெல்லாம் பறி போயிற்றுது..... இப்ப திருகோணமலையில அகதி முகாமில கிடக்கிறம். சாப்பாட்டு-க்கும் வழி இல்ல..... ஏதும் முடிஞ்ச உதவிய செய்யுங்கோ"

"நாங்க இப்பிடி எத்தின கள்ளர கண்ட நாங்கள்! அத இத காட்டி பிச்சை எடுக்கிறது. பிறகு கள்ளுத்தவறணையில போய் நிற்கிறது! போ வெளியே!" என்றவள் கதவை இறுக்கிச் சாத்தி விட்டு வந்தாள்! என்ன நினைத்தாரோ.... இருதயநேசன் இளநகை பூத்தார்.

அந்தோனியம்மா கணவன் முன்னால் வந்தமர்ந்தான். அவரைப் பார்த்து பேசத் தொடங்கினாள். பேச்சு புதிய தோரணையாக இருந்தது. என்னங்க மார்கழி மாதமும் பிறந்து நாட்களும் நகர்ந்து கொண்டு போகுது.... நாங்க வருத்தம், வாதை, கஷ்ட நஷ்டங்களைப் பற்றியே கதைத்துக் கொண்டிருக்கிறம். கிறிஸ்மஸ் கொண்டாடுற இல்லையோ? வருசத்துக்கு ஒருக்கா வாறது! கொண்டாடா-மலா விடுகிறது? ஒரு ஆயத்தமும் செய்யாமல் இருக்கிறமே. எங்கட அயலெல்லாம் வேதக்காரர்தான் நிரம்ப இருக்கிறார்கள். வேதக் கோவிலும் பக்கத்திலதான் இருக்குது. எல்லோரும் சேர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படியும் கொண்டாடலாமே ...!

கொண்டாடக்குள்ள நாங்கள் மட்டும் கஷ்டம், கவலை எண்டு போட்டு வீட்டப் பூட்டிப் போட்டு கொண்டாடாம இருக்கேலுமோ. மனைவியின் இந்தக் கதைக்கு இருதயநேசன் இளநகையோடு கேட்டார். "கஷ்டம், கவலை எண்டுறாய், நத்தார் வருஷம் கொண்டாடியே தீரவேண்டும் என்கிறாய், அப்ப இதுக்கெல்லாம் காசு எங்கால வைச்சா இருக்கிறாய்?"

இந்த முறை சீட்டுக்காசு எனக்குத் தானே ஐந்தாம் துண்டெல்லே எனக்கு. மார்கழி பிறந்து ஐந்தாம் தேதியாகவும் போச்சுது, இன்னும் சீட்டுக்காசு தரல்ல, இண்டைக்கே போய் கிழிக்கிற கிழியில தேடிக் கொண்டு வந்து காச நீட்டுவான். அதுக்குப் பிறகு பாருங்களன் ஆசைப்பட்டதெல்லாம் வாங்கி வடிவாக் கொண்டாடலாம். என்ன வாங்கப் போறாய், என்ன மாதிரி கொண்டாடப் போறாய், சொல்லு... என்ன கஷ்ட நஷ்டமெண்டாலும், நாங்கள் உங்கள விட நல்லாயிருக்கிறம் மகிழ்ச்சியாக இருக்கிறம் எண்டு காட்டுறது தானே ஒவ்வொருவரின்ற நோக்கமும். முதல் வீட்டுக்கு "பெயின்ற்" பூச வேணும், பட்டுத்தாளுகள் வேண்டி வடிவாச் சோடிக்க வேணும், பாலன் கூடு வைக்க வேணும்... எனக்கு பிள்ளைகளுக்கெல்லாம் உடுப்பு எடுக்க வேணும். கேக்கடிக்க வேணும், பலகாரம் சுட வேணும், தொதோள் கிண்ட வேணும். எங்கட தொதள் நல்ல ருசி எண்ட எல்லோரும் விரும்பி வாறாங்க... போன முறை இங்க பக்கத்தில இருக்கிறாள் என்ர தங்கச்சி, நல்ல மினுங்கிற காஞ்சிபுர பட்ட உடுத்தி பெரிய எழுப்பம் காட்டினவள். இந்த முறை அதைவிட திறமான சீலைய நான் கட்டிக்காட்ட வேணும்....'

நேசன் ஆடிப்போய் விட்டார்... இந்த ஜென்மத்தில் சனங்களை திருத்தவே முடியாதா? என்றாலும் முயன்று தான் பார்ப்போமே... 'வழக்கமாக எல்லாரையும் போல செய்யுற மாதிரி இல்லாமல், இந்த முறை புது முறையாக கொண்டாடிப் ·பார்க்கலாமே' 'அதென்ன புதுமுறை சொல்லுங்கோ பார்ப்பம்' 'போன ஞாயிற்றுக்கிழமை பூசைக்கு நீயும் வந்தனீதானே. சாமியார் பிரசங்கத்தில என்ன சொன்னார் எண்டு ஞாபகமில்லையா?' எனக்கு மறந்து போச்சுது நீங்கதான் ஞாபகப்படுத்துங்கோ... 'கோயிலுக்குப் போறது பூசை காணுறது செபிக்கிறது இவை எல்லாவற்றையும் விட சிறந்தது, இயேசு காட்டிய வழியில நடக்கிறதுதான். அப்போதுதான் கடவுள் நம்மோடு இருந்த கஷ்ட துன்பங்கள் இல்லாமல் காப்பார்... நூறு முறை கோவிலுக்குப் போவதிலும் ஓர் ஏழைக்கு உதவி செய்வதே மேலானது..... ஓமுங்கோ நீங்க இப்பிடி சொல்லேக்குள்ள தான் எல்லாமே ஞாபகம் வருகுது... அது நல்ல யோசனைதான். எங்கட துன்பம். தொல்லைகள் நீங்க இந்த புது முறையில கொண்டாடிப் பார்ப்பம்.... சரி எப்பிடி கொண்டாட வேணும் எண்டு யோசிச்சிருக்கீங்க... சொல்லுங்கோ? நாங்க நல்ல தீன் பண்டங்கள செய்து, நல்ல நல்ல உடுப்புகளையும் வாங்கிக் கொண்டு அகதி முகாமுக்கும் வயோதிப மடத்துக்கும், அனாதை இல்லத்துக்கும் போய் குடுத்துப் போட்டு, அங்கேயே நிண்டு அந்த அனாதரவான சனங்களோட நிண்டு கொண்டாடிப் போட்டு வருவம்... ஏழைகளின் கண்ணீரைத் துடைக்கிறது தான் முதல் தரமான புண்ணிய காரியம்! கடவுளுக்கு உவப்பான செயல்... இயேசு பாலன் பிறப்பே அதற்காகத்தான்....

அந்தோனியம்மாவின் முகத்தில் ஒரு வித பரவசம்...... (யாவும் கற்பனை.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளின் தெரிவா? கருத்தடையா?

## "தலித்தோமைட் மாத்திரை"

அருட்பணி.மா. றேஜிஸ்
இராசநாயகம்

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின் தூக்கமின்மைக்கு மாத்திரமல்ல, கர்ப்பிணித் தாய்மார்களின் ஏனைய நோய்களுக்கும் நிவாரணியாக மருத்துவர்களினால் வழங்கப்பட்டது 'தலித்தோமைட்' என்னும் மாத்திரை. நைரோபி என்னும் நகரில் தனது இளம் குடும்பத்துடன் அக்காலத்தில் கர்ப்பிணியாகிய சாராவுக்கும் இம் மாத்திரை வழங்கப்பட்டது.



அது 'தலித்தோமைட்' என்னும் தூக்க மாத்திரையின் மோகம் மேலோங்கிய காலம். திருமதி சாரா பிகராடோ தனது நான்காவதும் கடைசியுமான பிள்ளை அந்தோனியைக் கருத்தரித்தார்.

இம் மாத்திரை பிறக்கும் குழந்தைகளில் கொடிய கோளாறுகளை ஏற்படுத்துவது 1961ம் ஆண்டு வரை கண்டுபிடிக்கப்படவில்லை. பல குழந்தைகளில் குறுகிய உடல் உறுப்புக்கள் அல்லது உடல் உறுப்புக்களே இல்லாத 'பொக்கோமீலியா' என்னும் நோயை இம் மாத்திரை ஏற்படுத்தியதால் 1962ல் இம் மாத்திரை முழுமையாகத் தடைசெய்யப்பட்டது.

சாராவும் இத்தகைய குறைபாடுள்ள குழந்தையின் தாயாகப் போவதை உணர்ந்த மருத்துவர்கள் அவர் கருச்சிதைவு செய்து கொள்ள ஆலோசனை கூறினர். கத்தோலிக்க தம்பதியரான சாராவும் அவரது கணவரும் தமது மகனுக்கு இறைவன் வழங்கப்போகும் 'சிறப்புப் பணியை' உணர்ந்து கருச்சிதைவு செய்ய மறுத்துவிட்டனர்.

**அதைத் தொடர்ந்து அவர்களது வாழ்வில் ஏற்பட்ட அதிசயம்...?**

**மருத்துவ ஆலோசனைக்கு மறுப்பு:**

இப்பொழுது 52 வயதுடைய அருட்பணி அந்தோனி பிகராடோவின் கூற்றுப்படி இவரின் பெற்றோர் 'ஒரு குழந்தை கருத்தரிக்க இறைவன் திருவுளம் கொண்டால், அச்சிசுவை நாம் வீணாக்கக்கூடாது. மாறாக இறைவன் அக் குழந்தைக்கென ஒரு பணியைக் கொண்டுள்ளார். நான் ஒரு குருவாவேன் என்று அவர்கள் நம்பினர்' என்று கூறினார்.

மருத்துவர்களின் இவ் வற்புறுத்தலை தனது குருத்துவ திருப்பொழிவு தினத்திலன்றே கூறியதாக அவ் அருட்பணியாளர் கூறினார். சூம்பிய கரமுடையவராக இருந்த போதிலும் அருட்பணி அந்தோனி பிகராடோ 1994ல் குருவாகத் திருப்பொழிவு செய்யப்பட்டார்.

**அழைத்தலின் வித்தை விதைத்த பெற்றோர்:**

**தொடர்ச்சி மறுபக்கம்... ...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நலம் நாடி

தனது விசுவாச வாழ்விலும் அழைத்த-லிலும் தனது பெற்றோர் ஆற்றிய பாரிய பங்களிப்புப் பற்றிக் குறிப்பிடும் போது 'நான் குருவாவதற்கு அவர்கள் என்றுமே தடை விதித்ததில்லை' என்று கூறிவருகின்றார்.

அந்தோனியின் தாயை அவவின் மகன் காட்டிய படத்தில் மூன்று வருடங்களுக்கு முன்பு திருத்தந்தை கண்டுள்ளார். தாய் சாராவத்திக்-கானுக்கு வருகிறார் என்று கேள்வியுற்ற திருத்தந்தை சாராதன் இல்லத்திலேயே வந்து சந்திக்க ஏற்பாடு செய்துள்ளார். திருத்தந்தை-யுடனான சந்திப்பின் பின் நடைபெற்ற திருப்பலி-யின் போது திருப்பலிப் பாத்திரத்தை ஏந்தி வந்த சாரா' திருத்தந்தையைச் சந்தித்தது இறைவனின் ஒரு கொடையே... இச்சிறப்பு நிகழ்வில் கலந்து கொள்வதற்கு இறைவன் என்னைத் தேர்ந்து கொண்டமை பற்றி நான் பெருமைப்படுகிறேன்' என்றார். திருப்பலிப் பாத்திரத்தை நான் திருத்-தந்தையிடம் கொடுத்தபின் 'அவர் என் கரங்களை இறுகப்பற்றி என்னை நன்கு தெரிந்து கொண்டார்' என்று கூறிய சாரா, இவ் அனுபவத்தை 'நான் என் வாழ்நாள் முழுவதும் நினைவு கூர்வேன். இதற்காக நான் இறைவனுக்கு நன்றி கூறுவேன் என்று விபரித்தார். திருத்தந்தையைச் சந்தித்து அவரது திருக்கர ஆசிரைப் பெறுவதற்கான இவ் அரிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்ததன் மகனுக்கும் நன்றி கூறினார்.

'இவ் வுலகுக்கு அதிக குருக்கள் தேவைப்படுகின்றனர' என்று கூறிய சாரா, தன் மகனின் இறை அழைத்தலுக்காக தான் 'இடைவிடாமல் மன்றாடியதாக' கூறினார். சாரா தொடர்ந்தும் தினமும் ஒரு செபமாலை செபிப்ப-தாகவும், செபமாலையைத் தலையணையின் கீழ்



வைத்திருந்து, இரவு நித்திரையிலிருந்து எழும்பினால், மீண்டும் நித்திரை கொள்ளும் வரை ஒரு காரணிக்கம் சொல்லுவதாகவும் கூறினார்.

**இறை நம்பிக்கையின் அடையாளம்:**

குருக்களின் யூபிலியைத் தனது தாயின் அருகிலிருந்து கொண்டாடியது 'இறைவன் என்மட்டில் கொண்டுள்ள பிரமாணிக்கத்தின் மாபெரும் அடையாளம்' என்று அருட்பணி அந்தோனி பிகராடோ தெரிவித்தார்.

விசேடமாக ஒருவர் தனது வாழ்க்கையி-லிருந்து எதையாவது ஒருவருக்கு கொடுக்கும் போது, அதாவது பெற்றோர் என்ற நிலையையோ - பிள்ளை என்ற நிலையையோ - துன்பநிலை-களையோ அல்லது அழைத்தலையோ கொடுக்கும் போது அது இறைநம்பிக்கையின் அடையாள-மாகிறது என்றார்.

**சிறப்புப் பணி:**

தன்னைப் பற்றி தன் அன்னை நம்பும்

தொடர்ச்சி மறுபக்கம் ... ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நலம் நாடி

'சிறப்புப் பணி' பற்றி அருட்பணியாளர் கூறும் போது, துன்புறுவோருடன் தான் கொண்டிருக்கும் தோழமையும் அவர்களுக்குத் தான் காட்டும் சிறப்பான கருணையுமே அது என்றார். 'வலுவின்மையில் தான் இறைவனின் வல்லமை நிறைவாய் வெளிப்படும்' என்னும் தூய பவுலடியாரின் வார்த்தைகளை நான் முழுமையாக நம்புகிறேன் என்று கூறிய அவர், 'தமது வாழ்வில் சிறப்பாக சிலுவையைக் கொண்டிருக்கும் ஒருவர், துன்புறுவோர் மட்டில் ஒருவித பரிவையும் இரக்கத்தையும் காட்டமுடியும்' என்னும் அவரது அசையா நம்பிக்கையை வெளியிட்டார்.

**ஒருங்கிணைந்த வாழ்வே வலுவுள்ள சாட்சியம்:**

ஒரு குருவாக 'அனைவரும் மீட்புப் பெறும்வரை நான் நற்செய்தியை அறிவிக்கமுடியும்' என்று கூறும் அவர் 'நீங்கள் துன்பத்தை அனுபவிப்பதைப் பார்க்கும் போது, மக்கள் இரண்டையும் இணைத்துப் பார்த்து உங்கள் வார்த்தைக்குக் கவனமுடன் செவிமடுப்பார்கள்' என்றார். அருட்பணி அந்தோனி பிகராடோவுக்கு இயேசு சிலுவையில் செய்தது இதுதான்: 'அவர் எமக்காக சிலுவையில் துன்புற்றார், நானும் துன்பத்தினூடாகப் பயணிக்கும்போது, எனக்கு முன் பயணித்த அவரும் விசுவசித்தார், துன்பத்தினூடாகவும் தந்தை நன்மை பயக்கச் செய்வார் என்று நம்பினார் என்னும் உறுதிப்பாடு எனக்கு ஏற்படுகின்றது. திருத்தந்தை பிரான்சிஸ் ஒவ்வொரு குருவுக்கும் கிறிஸ்தவருக்கும் பரிந்துரைத்தது போல மந்தையின் வாடையைக் கூர்ந்து நுகர வேண்டும்' என்று மேலும் அவர் வலியுறுத்தினார்.

◆◆◆ ◆◆◆

## நண்பா நலமா




நெஞ்சில் ஈரமற்ற சிலரால்
நெருப்பு பிறக்கிறது தோழா
கொஞ்சி யன்பாய் வாழுவோரைக்
கொழுத்திக் கொல்கிறது.

நீதி, நேர்மை, நியாயம் தானும்
நீராய்ப் பிறக்கிறது – தோழா
பாதிப் பிரிவால் நமது தேசம்
பற்றியெரிகிறது

கஞ்சியென்று பிஞ்சுக் குழந்தை
கதறியழுகிறது – தோழா
வஞ்சியருள்ளம் வாழ்விழந்து
வாடிப் போகின்றது



இறால்குழி
சிவகுருநாதன்

வர்க்கம் பிரிக்கும் நிகழ்விங்கு
வாடிப் போவதெப்போ – தோழா
சொர்க்கம் என்றே எங்கும் தேன்
சொரிந்து இனிப்பதெப்போ....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் மறை மாவட்ட ஆயர் பேரருட் திரு ஜஸ்ரின் பேர்னாட் ஞானப் பிரகாசம் ஆண்டகை அவர்களுடனான நேர் காணல்.

ஆயரவர்களே! திருகோணமலை, மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர்களையும் அருட் தந்தையர்களையும் நேர்கண்டு 'அலை ஓசை' சஞ்சிகையில் இக் காலாண்டில் பிரசுரிக்கும் நோக்கில் தங்களை நேர் காண்பதில் அலை ஓசை குடும்பம் பெரு மகிழ்ச்சியடைகின்றது.

ஆயரவர்களே...

திருகோணமலை மறை மாவட்ட கலைத் தொடர்புகள் நிலையத்தால் வெளியிடப்படும் காலாண்டு சஞ்சிகையான 'அலை ஓசை' தங்களை நேர் காண்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றது.

**தாங்கள் 1974 இல் குருவாக இறை பணியை ஏற்று மூன்று வருடங்கள் கிளிநொச்சி மறைக் கோட்டத்தில் உதவிப் பங்குத் தந்தையாக வலைப்பாடு, உருத்திரபுரம் ஆகிய பங்குகளில் மக்களை வழிநடத்தியுள்ளீர்கள். கஷ்டப் பிரதேசங்களில் தாங்கள் பணியை ஆரம்பித்த அனுபவங்கள் பற்றிக் கூற முடியுமா?**

முதலாவதாக ஆயரவர்கள் எனக்கு இளவாலை ஹென்றியரசர் கல்லூரியைத் தான் தந்தார். நான் பங்குகளில் பணிபுரியவேண்டும் என்று கேட்டுக் கொண்டதால் வலைப்பாடு, உருத்திரபுரம், கிளிநொச்சி ஆகிய பங்குகளைத் தந்தார். வலைப்பாட்டுடன் அந்த நேரத்தில் இரணைதீவும் சேர்ந்திருந்தது. சிரமமான பயணம். இரணைதீவில் பலிப்பூசை நடாத்திவிட்டு வலைப்பாட்டுக்கு வந்து, அத்தோடு சேர்ந்து நாச்சிக்குடா, தேவன்பிட்டி, குமிழமுனை ஆகிய பங்குகளிலும் பலிப்பூசை நடத்த வேண்டியிருந்தது. அங்கே பிரயாண வசதிகள் தான் மிகவும் கஷ்டம். ஆனால் ஆயரவர்கள் எங்களுக்கு ஒரு வாகனத்தை தந்திருந்தார் ஆன படியால் அது மிகவும் உதவியாக இருந்தது. ஆனால் பாதைகள் எல்லாம் மிகவும் மோசம். பின்னர் அங்கேயிருந்து கிளிநொச்சிக்கு வந்து விடுவோம். அப்போது அருட்தந்தை தேவராஜ் உதவியாக இருந்த படியால் அவர் இரணைமடுவுக்குச் செல்லும் போது நான் கிளிநொச்சிக்குச் செல்வேன். கிளிநொச்சியிலிருந்து உருத்திரபுரத்திற்கு மாற்றப்பட்ட போது அங்கே அநாதைப் பிள்ளைகள், கமக்காரர்கள், கல்வி கற்போருக்கு உறுதுணையாக இருந்தேன். அது மிகவும் மகிழ்ச்சியான அனுபவமாக இருந்தது. 1976 இல் ஆயரின் ஆணைப்படி இளவாலை ஹென்றியரசர் கல்லூரிக்குப் பணி புரியச் சென்று விட்டேன்.

**தாங்கள் பங்குத் தந்தையாக பணியாற்றியது மட்டுமன்றி ஹென்றியரசர் கல்லூரி, யாழ். புனித பத்திரிசியார் கல்லூரிகளில் அதிபராகவும் கல்விப் பணியாற்றியுள்ளீர்கள். யாழ் மண்ணில் பிரபலமான இக்கல்லூரிகளின் கல்வி வளர்ச்சியில் தங்களின் பங்களிப்பு எத்தகையதாக இருந்தது?**

புனித ஹென்றியரசர் கல்லூரியில் 13 வருடங்கள் உப அதிபராக பணி புரிந்த பிறகுதான் நான் அதிபராக கடமையேற்றேன். கடமையேற்று இரு வருடங்களில் பெரும் இடப்பெயர்வு ஏற்பட்டது. பிள்ளைகள், பெற்றோரை அழைத்துக் கொண்டு மானிப்-பாயில் பாடசாலை கட்டி அங்கே கல்விப் பணியாற்றி வந்தேன். அந்த நேரத்திலும் கல்வியிலும் விளையாட்டிலும் முதலிடம் பெற்றுக் கொண்டு வந்தோம். அதை கல்வி அதிகாரிகள் மிகப் பெருமையாக எல்லோருக்கும் சொல்வார்கள். திரும்பவும் 1995ல் இளவாலை திரும்பி போய் பாதிக்கப்பட்ட கட்டிடங்களையும் மாணவர்களையும் சீர்படுத்தி-னோம்.

பின்னர் ஆயர் அவர்கள் புனித பத்திரிசியார் கல்லூரிக்கு அதிபராக போகும்படி கேட்டுக் கொண்டார். நான் "இன்னும் 5 வருடங்களுக்கும் இங்கேயே இருந்து ஓய்வு பெற்றுப் போகிறேன்.' என்று கேட்டாலும் 'இல்லை இல்லை இங்கு தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போக வேண்டும்' எனக் கேட்டுக் கொண்டார். அதனால் அவரின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டேன். நான் விரும்பி வராத படியால் இறைவன் முழு பக்க பலமாக இருந்தார். பல மில்லியன் கணக்கான பணத்தை கொண்டு இந்த கட்டிடங்களையும் கட்டி உடைந்த கட்டிடங்கள் யாவற்றையும் சீர் திருத்த முடிந்தது.

**யாழ் பல்கலைக்கழகம், யாழ் பெரிய குருமடம் ஆகிய தளங்களில் 1992 – 2006ம் ஆண்டு காலப்பகுதியில் சேவையாற்றியுள்ளீர்கள். முன்னைய அனுபவங்களை விட இவை எவ்வகையில் வேறுபட்ட அனுபவங்களைத் தந்தன?**

யாழ் பல்கலைக்கழகத்தில் பேரவை அங்கத்தவராக இருந்திருக்கின்றேன். பகுதி நேர விரிவுரையாளராக பல்கலைக்கழகத்திலும் குருமடத்திலும் பணியாற்றிய போது பல அனுபவங்களைப் பெற்றேன். பாடசாலை மட்டத்தில் மாணவர்களோடு வித்தியாசமாகவும் பல்கலைக்கழகத்தில் கற்று வேறுபட்ட முறையில் பழகும் வாய்ப்பு கிடைத்தது. பல இந்து மத பேராசிரியர்கள், மாணவர்களோடு பழகும் சந்தர்ப்பமும் கிடைத்தது. ஏனெனில் அங்கு என்னை கட்டுப்பாடு, ஒழுங்கு என்பவற்றிற்கு பொறுப்பாக்கி விட்டார்கள். இதனால் எல்லாப் பிரச்சினைகளையும் கையாண்டது நல்ல அனுபவம். பலரோடு பணியாற்றியதால் பேராசிரியர்கள், மாணவர்கள் பலரோடும் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது.

**மேற்படி அனைத்து அனுபவங்களும் 2015 இல் தாங்கள் யாழ் மறைமாட்ட ஆயராக திருநிலைப் படுத்தப்பட்ட பின்பு தங்களின் பாரிய இறை பணிக்கு எந்த வகையில் பிற்புலத்தில் பயனளிக்கின்றன?**

முதலில் குரு முதல்வராக ஏழு வருடங்களுக்கு அதிகமாக பணியாற்றினேன். அதிலே கண்ட அனுபவம் பாடசாலை வேறு... குருக்களை மேய்ப்பது என்பது வேறு எனப் புரிந்தது. பல்கலைக் கழகத்தில் பணியாற்றியதாலும் பாதுகாப்புப் படை உயரதிகாரிகள், பல பேராசிரியர்கள், சிங்கள நண்பர்கள் எனப் பலரைத் தெரியும். கல்வித் திணைக்களத்திலும் பலரோடு வேலை செய்ததால் ஏற்பட்ட அனுபவங்கள் மிகவும் பக்கபலமாக இருந்தது. இருந்தும் அந்த ஏழு எட்டு வருடங்களாக ஆயர் என்னை ஆயத்தப்படுத்தியிருந்தார். அதனால் தலையிடி என்ன... என்ன பிரச்சினைகளைத் தாங்க வேண்டும் என்பது ஏற்கனவே எனக்குத் தெரியும். ஆனால் நான் எனது பணியின் கடைசிக் காலத்தை ஒரு பங்கிலேயே கழிக்க வேண்டும் என்று விரும்பியிருந்தேன். ஆனால் இறைவன் என்னை ஆயத்துவப் பணிக்கு என்னை வழிநடத்தியிருந்தார்.

**“புதிதாக எழுவோம்” என்ற தொனிப் பொருளில் புதிய எழுச்சியையும் உத்வேகத்தையும் யாழ் மாவட்ட மேய்ப்புப் பணியில் உருவாக்க செயற்றிட்டம் வகுத்துள்ளீர்கள். இதற்கான அடிப்படைக் காரணிகள் பற்றிக் கூற முடியுமா?**

நான் குரு முதல்வராக இருக்கும் போதே அவதானித்தேன். ஒரு சோர்வு, தேக்க நிலை இருந்தது. போரில் பாதிக்கப்பட்ட சமூகம். மக்கள் மத்தியிலும், குருக்களிடமும் ஆன்மீக வாஞ்சை, தேடிப் போய் பணியாற்றுவது மிக மிகக்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

குறைந்துவிட்டது. இது கவலைக்குரிய விடயம். முன்னாள் ஆயரும் இக் கருத்தோடு தான் இருந்தார். எங்களுடைய வேலை 'Light Search' தேடிப் பணியாற்றுவது. எனவே கால் நிலத்தில் தான் இருந்தது. மக்களின் நிலை என்ன... குருக்கள் மக்களிடமிருந்து விலகியுள்ளார்கள் என்று பலர் அறியாதிருந்தார்கள். இதனால் பிரச்சினை என்னவென்று தெரிந்ததால் மக்கள், குருக்கள், துறவிகள் ஏன் நானும் தான் புதிதாக மாற வேண்டும் என எண்ணினேன். இது தேவையாக இருந்தது. அடுத்த வருடங்களில் சேவை செய்யா விட்டால் எங்களோடு இருப்பதும் எங்களை விட்டுப் போய்விடும்.

அடிப்படையில் சிந்திக்க வேண்டியிருக்கிறது. பலர் வெளிநாடு சென்றுவிடுவார்கள். இது ஒரு வகையில் நல்லது. உள்ள பிரச்சனைகளும் அவர்களோடு வெளியே போய்விட்டது. இங்கு இப்போது இருப்பவர்கள் ஏழைகள், பாதிக்கப்பட்டவர்கள். இவர்களுக்கு வசதியில்லை. வசதியிருந்திருந்தால் வெளிநாடு சென்றிருப்பார்கள். இவர்களுக்குத்தான் சேவை செய்ய வேண்டும். இப் பணியில் ஈடுபடவில்லை என்று குருக்களை பிழை சொல்லவில்லை. அன்பியத்தில் ஐந்து வருடங்கள் ஈடுபட்டவர்கள் தமக்குள் முரண்பட்டுவிட்டு இதில் மெனக்கெட்டு என்ன பிரயோசனம் என்று விலகி விட்டார்கள். அதைப் புதுப்பித்துக் கொண்டு நடத்துவதற்கு கொஞ்சம் உஷார் வேண்டும். அதைத் தீர்ப்பதற்காகவே இந்து மகாநாடு நடைபெறுகிறது. குருக்கள், மக்களை இறைவன் பக்கம் ஆன்மீக வழியில் அழைத்துச் செல்ல வேண்டும். நிலையறி ஆய்வில் பல விடயங்களைக் கண்டு கொண்டேன். ஆய்வு செய்த அருட்சகோதரர்களைக் கேட்டேன் என்ன பிரச்சனை-களைக் கண்டீர்கள் என்று. அவர்கள் சொன்னார்கள், மக்கள் குருக்களைப் பரிசுத்தவான்களாகக் காண்கிறார்கள். Holy men, men of fair இந்த இரண்டையும் தான் மக்கள் கேட்டுக் கொண்டார்கள். அவர்களிடம் நான் கூறினேன், 'நீங்கள் சுவாமியாராக வரப் போகிறீர்களல்லோ' இந்த சிந்தனையை வைத்திருங்கோ... பிறகு மாறாதேயுங்கள்.... தேடிக் காக்கும் பணியில் குருக்களும் துறவிகளும் நாமும் ஈடுபட வேண்டும் என்பதற்காகவே இம் மாநாடு நடைபெறுகிறது.



**"எழுக தமிழ்" என்ற கோஷங்களோடு ஊர்வலங்களும் மேடைப் பேச்சுக்களும் தற்போது எழுச்சி பெற்றுள்ளன. இதற்கு எதிரான கருத்துக்களும் தெற்கில் எழத் தொடங்கியுள்ளன. இன்றைய அரசியல் நிலை தொடர்பாக தாங்கள் எவ்வாறு நோக்குகிறீர்கள்?**

தற்போதைய அரசாங்கம், ஜனாதிபதி அவர்கள் மக்களுடைய பிரச்சனைகளைத் தீர்க்க வேண்டும் என்ற ஆர்வத்துடனுள்ளார். ஆனால் இதைச் செய்ய முடியாது ஏனென்றால் கூட்டு எதிர்க்கட்சி மிகவும் பலம் வாய்ந்தது. இதுதான் யதார்த்தம். இதற்குள் அவர் ஏதோ செய்யப் போகிறார்கள் என்று சொன்னால் பல பிரச்சனைகளுண்டு. நாங்கள் இங்கே அரசியல்வாதிகள் ஏதாவது சொன்னால் அதைத் திரித்து சில அடிப்படைவாதிகள் எதிராகத்தான் சொல்வார்கள். ஆகவே தான் தமிழர்களின் பெரிய கட்சியான தமிழர் விடுதலை கூட்டணி அமைதியாக உள்ளது. இப்படியான எழுச்சிகளைச் செய்வது மக்களுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**30 வருட காலமாக ஜனநாயக ரீதியிலும் ஆயுதம் தாங்கி 30 வருட காலமாக போராடியும் கிடைத்திராத ஒரு தீர்வை பெற்றுக் கொள்வதற்காக மக்களின் விருப்பத்திற்கிணங்க மேற்கொள்ளப்படுகிறது "எழுக தமிழ்"**

உணர்ச்சிகளையும் காட்ட வேண்டும்

இன்னுமொரு முறை யுத்தத்தை தமிழினம் தாங்காது. இருபத்தைந்து வருடமாக துன்பப்பட்ட சனம் குரலெழுப்புது. ஜனாதிபதிக்கு விருப்பம் ஆனால் 'கடவுள் வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்காத நிலை' போல அரசியல் உள்ளது. இதுதான் களநிலை ஆகவே அரசியல் சார்ந்த, கட்சி சார்ந்த முயர்சிகளில் நாம் ஈடுபடுவதில்லை. பொதுவாக எமது உரிமைப் பிரச்சினை என்ன என்பதை மக்கள் சொல்வதற்கு அவர்களுக்கு உரிமையுண்டு. ஆனால் தெற்கில் எப்போதும் இதை திரிவுபடுத்தித்தான் சொல்வார்கள். உதாரணமாக ஒரு இன்ச் காணி இங்கே விடுவித்தால் அங்கே சொல்வார்கள் நூறு ஏக்கர் காணியைக் கொடுத்துவிட்டார்கள் என்று. இது எங்களுக்கு முப்பது வருடமாகப் பழகி விட்டது.

முப்பது வருடமாக ஜனநாயக ரீதியில் போராடினோம் சரி வரவில்லை. முப்பது வருடம் ஆயுதம் தாங்கியும் போராடினோம் சரி வரவில்லை. இப்ப என்ன நடக்கின்றது என்பதைப் பார்ப்போம் என்ற நோக்கில் தான் பெரிய கட்சிகள் இருக்கின்றார்கள். மக்கள் தங்களின் விருப்பங்களைச் சொல்ல எல்லோருக்கும் உரிமையுண்டு. இக் கோஷங்கள் தீர்வைக் குழப்புமா? என்று என்னிடம் கேட்டார்கள். அரசியல் சார்பானதாக எங்கள் பணி அமையாது. யாழ்ப்பாணத்தில் ஒரு அமைப்பினை உருவாக்கியுள்ளேன், புத்தி ஜீவிகள் அதில் அங்கம் வகிக்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் குடி, போதைவஸ்து, கொலை, கொள்ளை என்று எல்லோரும் கதைக்கிறார்கள். ஒரு தரமாவது இது பற்றி யோசிக்கவில்லை. இது தொடர்பாக வெளி நாடுகளுக்கும் சென்று கதைத்து தீர்வுக்காக அமைப்பு ரீதியாக இயங்குகின்றோம்.

முதலமைச்சர் இப்போது தான் தொடங்குகிறார். இப்படியான பிரச்சனைகளிலிருந்து எங்கள் மக்களை காப்பாற்ற வேண்டும் என்று யோசித்த போது முக்கியமான பிரச்சினை வேலை வாய்ப்பு. வேலை வாய்ப்பு இல்லாமல் தான் விரக்தி நிலைக்கும் போய்விட்டார்கள். அடுத்த வாரம் ஒரு குழு வெளிநாட்டிலிருந்து வருகின்றது. அவர்களும் நாங்களும் இதற்கான தீர்வினை செயற்படுத்தவுள்ளோம்.

**நவீன தொழிநுட்ப தொழிற்சாலைகள் அமைத்து வேலை வாய்ப்பினை வழங்கினால் தான் எங்கள் பிள்ளைகள் உஷாராவார்கள். இல்லையேல் 10 வருடங்களின் பின் வெறும் கட்டிடம் தான் மிஞ்சும்.**

**எனவே நாம் திட்டமிட்டு எமது பிள்ளைகளை காப்பாற்ற வேண்டும்.**

**நேர்கண்டவர் :**
**கிறிஸ்டி முருகுப்பிள்ளை**

◆◆◆ ◆◆◆



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## "தமிழர் அரசியலில் மாற்றுச் சிந்தனை"




திரு. தம்பியப்பா கோபால கிருஸ்ணன் அவர்களினால் கடந்த 2016.11.20ம் திகதி மட்டக்களப்பில் வெளியிடப்பட்ட 'தமிழர் அரசியலில் மாற்றுச் சிந்தனைகள்' என்னும் ஆய்வு நூல் கிடைக்கப் பெற்றோம். மட்டு நகரிலிருந்து வெளிவரும் மாதாந்த இலக்கியச் சஞ்சிகையான "செங்கதிர்" இன் ஆசிரியரும் கலை, இலக்கிய, அரசியல்-சமூக செயற்பாட்டாளருமான திரு.தம்பியப்பா கோபால கிருஸ்ணன் அவர்கள் தமிழ் மக்களின் வாழ்வு நிலையை ஆவேசத்துடன் ஆணித்தரமாக எடுத்துரைத்துள்ளார்.

'எனது எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் உடனடியாக நிகழாது போனாலும் எனது காலத்தில் எனக்குரிய சமூகப் பொறுப்பினை உணர்ந்து மாற்றத்திற்கான விதையைத் தூவியுள்ளேன். உரிய நேரத்தில் அது முளை விடும் என்ற ஆத்ம திருப்தியுடனாவது எனது மூச்சு அடங்கட்டும்' என்ற சிந்தனைத் தெளிவுடனும் பற்றுறுதியுடனும் இந்நூலை தமிழர் கரங்களில் ஒப்படைத்துள்ளார். இவரது நிதர்சனங்கள் அரசியல் பிழைப்பு நடத்தும் அரசியல் வாதிகளுக்கு உறுத்தத்தான் செய்யும். எனினும் உண்மையும் அது தானே. சற்று வலிக்கத் தான் செய்யும்.

**தொடர்புகளுக்கு :-**
**607, பார் வீதி, மட்டக்களப்பு**

## மாறுபாடுகள்



**இறால்குழி சிவகுருநாதன்**

கண்ணால் காண்பதைக் கூட
பொய்யென
நிரூபித்து விடுகிறார்கள்
கடவுளுக்கு மட்டும்
தெரியுமென
ஊருக்குள் நீதி
ஊசலாடுகிறது.

நன்றி சொல்ல மறந்து
விட்டேன் அந்த
உத்தமனுக்கு
ஏனென்று கேட்கிறீர்களா
வஞ்சக நெஞ்சம்
படைத்தவன் அவனாம்
என்று யாரோ சொன்னதைக் கேட்டு

உண்மையாய் சொல்கிறேன்
உங்கள்
கேள்விக்கு என்னிடம்
பதில் இல்லை
போருக்குள் அனைத்தும்
புதைந்து போய் விட்டது.

என்றோ எப்போதோ
நடந்த அந்த நினைவுகள்
இன்றும் என் இதயத்தில்
புல்லரித்துக் கொண்டிருக்கிறது
நீயும் - மனிதனா
எனக் கேட்டு

அமைதி அழிந்து அதிக நாள்
ஆயிற்றாம் எங்கும்
அநீதியின் ஆக்கிரமிப்புக்களால்
பிரசவமாவது
கொலையும் கொள்ளையும்
கற்பழிப்புக்களுமே

யார் - யாரிடம், ஏன் - எப்படி
எதற்கு – என்று கேட்பது
போர் முடிஞ்சு போச்சே
ஆண்டிரண்டாச்சே
பிறகென்ன மாறுபாடுகள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




(தேடலும் சாடலும் என்ற பகுதி தமிழினத்தின் சமூக, சமய, விழுமிய ஒழுக்க விடயங்களில் தாங்கள் காணும் பிரச்சனைகளை அல்லது உங்கள் உள்ளங்களில் தாக்கங்களை ஏற்படுத்திய எழுவினைகளை (issues) இனங்கண்டு அதன் விளைவுகளையும் அப் பிரச்சனைகளை தீர்க்கக் கூடிய தங்கள் காத்திரமான கருத்துகளுக்கு களம் அமைக்கிறது. தேடுங்கள் எழுதுங்கள்.... )

நன்றி : பாலசிங்கம் சுகுமார்

(முகப்புத்தகம்)

## மூதூர் வரலாறு

மூதூர் என நாம் அறியப்படுகிற நகரம். அதன் வரலாறு மிகப் பழமையானது. மூதூர் என்பதற்கு நாம் இரண்டு வகையான பொருள் கொள்ளலாம். ஒன்று மூதூர் மூத்த ஊர் பழைய ஊர் என்பதாகும். அடுத்த முத்தூர் முத்துக்கள் விளைந்த ஊர். முன்னய நாட்களில் முத்தெடுக்கும் தொழில் நடைபெற்றதாக கர்ண பரம்பரைக் கதைகள் கூறுகின்றன. ஒரு முறை மூதூரை அடுத்துள்ள எங்கள் சேனையூர் கழியோடையில் எடுக்கப்பட்ட மட்டியிலிருந்து என் அம்மம்மா முத்தெடுத்த சம்பவத்தை இந்த கதைகளினூடாக பொருத்திப் பார்க்க முடியும்.

மூதூரில் முத்து விளைந்ததைத்தான் திருஞான சம்பந்தர் தன் தேவாரப் பதிகத்தில் இப்படி சொல்வார்.

**"குரை கடலோரம் நித்திலம் கொழிக்கும்**
**கோணமா மலை அமர்ந்தாரே"**

மாவலியாறு கடலோடு இரண்டு வழிகளில் கலந்து கொட்டியாரக் குடாவுக்கு அழகு சேர்க்கிறது. திருகோணமலை துறைமுகம் பண்டைக் காலம் முதல் உலக அளவில் அறியப்பட்டதாயும் கேந்திர முக்கியத்துவம் உடையதாயும் விளங்கியதைப் போல மூதூரும் ஈழத்தின் பண்டைய வியாபார துறைமுகமாக விளங்கியதற்கான சுவடுகள் இன்னமும் உள்ளன. தமிழர்களின் பூர்வீக நிலங்களில் மூதூர் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்று நகரம். பண்டைக் காலத்தில் ஒரு வணிக நகராக இது இருந்திருக்கிறது. கப்பல் கட்டுதலும், கடல் வணிகமும், மீன் பிடியும் முக்கியப்பட்ட இடமாயும் மாவலியின் கடல் சங்கமிப்பு, அதன் கரை வழி நாகரீகமும் விவசாயமும் இணைந்த வாழ்வாய் மூதூர் நெற்களஞ்சியமாய் திகழவும் வழி வகுத்தது.



ஈழத்தின் தமிழர் துறை முகங்களாய் இருந்த வல்வெட்டித்துறை, மன்னார், நீர்கொழும்பு, அமிர்தகழி ஆகியவற்றுடனான தொடர்புகளும் இருந்திருக்கின்றன. பண்டைய தமிழக துறைமுகங்களான தொண்டி, கொற்கை ஆகியவற்றுடனான தொடர்புகளுக்கான சாத்தியப்பாடுகளும் உள்ளன. முத்து வணிகம் செய்வோர் இங்கு வந்து முத்துக்கள் மற்றும் யானைத் தந்தங்கள் ஆகியவற்றை கொள்வனவு செய்து பாரசீக நாடுகளுக்கு சென்றிருக்க வாய்ப்புக்கள் உண்டு. என் இளமை நாட்களில் 1965 மூதூர் பழைய துறைமுகத்தில் சிறிய கப்பல்கள் கட்டும் தொழிலை பார்த்திருக்கிறேன். பல பாய்மரக் கப்பல்கள் தரித்திருந்து பொருட்களை ஏற்றுவதையும் இறக்குவதையும் கண்டிருக்கிறேன். சிறிய கப்பல்கள் வத்தை என அழைக்கப்பட்டன.

இலக்கிய கலாநிதி வ.அ. இராசரெத்தினம் தன்னுடைய 'சந்தானாள் புரவி' எனும் நாவலில் இந்த பண்பாட்டை அழகாய் விபரித்திருப்பார். கடந்த பல நூற்றாண்டுகளில் தமிழக திருநெல்வேலி, தூத்துக்குடி துறைமுகங்களினூடான தொடர்புகளும் வணிக உறவுகளோடு திருமண கொண்டு கொடுப்புக்களும் இருந்திருக்கின்றன. சோழர்களின் கடலாதிக்க காலத்தில் மூதூர் கவனம் பெற்ற ஒரு துறைமுகமாக இருந்திருக்கிறது. மூதூர் முகத்துவாரத்திற்கு பக்கத்திலிருக்கும் கங்கைத் துறை வருடந்தோறும் ஆதி கோண நாயகர் தீர்த்தமாடும் கலாசார மையமாக திகழ்கிறது. தம்பலகாமம், ஆலங்கேணி. கொட்டியாரம் என உறவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கமிக்கும் வரலாற்றின் நீட்சி.

மூன்றாம் கட்டை மலையின் கிழக்கு அடிவாரத்தில், 1979ல் நானும் பேராசிரியர் இந்திரபாலாவும் ஒரு சோழர் கால கல்வெட்டை கண்டறிந்தோம் அது இராஜேந்திர சோழன் காலத்து கல்வெட்டு. அதில் சுவஸ்தி சிறி பொறிக்கப்பட்டு மலையில் இருக்கும் கோயிலுக்கே கண்ணுக்கெட்டிய தூரம் வரையுள்ள வயல்கள் சொந்தம் என பொறிக்கப்பட்டிருந்தது.



**ஆனால் இன்று மூன்றாம் கட்டை மலையில் என்ன நடக்கிறது?**



**"தூய்மையாக இருப்பதும், மற்றவர்களுக்கு நன்மை செய்வதும்தான் எல்லா வழிபாடுகளின் சாரமாகும்"**

– சுவாமி விவேகானந்தர்



செ.ஞானராசா

## வானவில்

வானவில்லில் ஏழு வர்ணம் தெரியுது
வரும் மழைக்கு அறிகுறியைத் தருகுது
தான தர்மம் செய்வதற்கு விளையுது
தரும் மகிழ்ச்சி எங்களுக்குப் பெரியது

காண ஓடி வந்திடுவீர் தோழரே - அது
காட்டும் அழகு காட்சிபாரும் தோழரே
வானப் பெருங்கடலினிலே ஓடமாய்
வந்து கவிழந்து நிற்கிறதே ஓரமாய் !

சின்னக் கைகள் தட்டி நாமும் பாடுவோம்
சிறப்பான இதன் அமைப்பைப் பகருவோம்
தன்னைக் காண அழைக்கும் வில்லை நாடியே
தனியழகு என்று ஓகோ.... போடுவோம் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# நிலைமாறுகால நீதி

சந்திரகுமார் (முத்தூர் நிலா)

**இளைஞர்களே!**

கடந்த எனது மூன்று பதிப்புக்களிலும் இளைஞர்கள் யார்? அவர்கள் எங்ஙனம் சமூகம் மற்றும் உலக நீரோட்டத்தால் தாக்கத்திற்குள்ளாகின்றனர். எப்படி இளைஞர்கள் தம்மிடமுள்ள சாதக மற்றும் பாதக நிலைகளைக் கவனத்தில் கொண்டு தன்னையே அறிந்து கொண்டு தம்மைத் தாமே அடையாளப்படுத்துதலும் அதன் முக்கியத்துவம் மற்றும் தேவையையும் கொடுத்திருந்தேன். தொடர்ந்து இளைஞர்களின் திறன்விருத்தியானது அவர்களின் வாழ்வியலில் சிறப்புத்துவத்தைக் கொடுத்து நிலைத்திருக்கக்கூடிய ஆக்க விளைவுகளை உருவாக்க ஊக்கத்தைக் கொடுப்பதாகப் படைத்திருந்தேன். ஆனால் இவ்விதழில் சற்று மாறுபட்டதாக நிலைமாறுகால நீதி (Transitional Justice) எனும் விடயப்பரப்புடன் உங்களைச் சந்திக்க விளைகின்றேன்.







இளைஞர்கள் என்றால் குறுகிய வட்டத்திற்குள் தான் இருப்பார்கள் மேலும் தன்னைச் சார்ந்த விடயங்களில் மட்டுமே செயற்படுவார்கள் எனும் சமூக கண்ணோட்டத்திற்கப்பால் உலக நடப்புக்களையும் மற்றும் தன்னுடைய சமூகம்சார் நாட்டு நடப்புக்களையும் அதன் விளைவுகளையும் அறிய வேண்டியவர்களாவேயுள்ளனர். அதேவேளையில் சமூகப் பணியில் ஈடுபாடுடையவர்களாகவேயுள்ளனர் அத்தூர நோக்கத்திற்காகவே இவ்வறிவியல் சார்ந்த தற்கால விடயத்தை பகிருவதற்காக முன்வந்துள்ளேன்.

நிலைமாறுகால நீதி (Transitional Justice) என்றால் என்ன? அதற்கான செயற்பாடுகளில் அரசு, உலக நாடுகள் அல்லது சர்வதேச சமூகம் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன என்றெல்லாம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகங்கள், சர்வதேச கட்டமைப்புக்கள் மற்றும் நிறுவனங்கள் பேசிக்கொள்வதையும் பலதரப்பட்ட கூட்டங்கள், சந்திப்புக்கள் நிகழ்வதையும் நாம் இன்றைய காலங்களில் குறிப்பாக இலங்கையின் போருக்குப் பின்னரான காலப்பகுதியில் பேசப்படுவதையும் துண்டுப்பிரசுரங்கள் மற்றும் சுவரொட்டிகள் வாயிலாகவும் காண்கின்றோம் பார்க்கின்றோம். ஆகவே இந் நிலைமாறுகால நீதி (Transitional Justice) என்றால் என்ன? என்பதனை மனிதன் சமூகப்பங்காளி என்றவகையிலும் குறிப்பாக இளைஞர்களாகிய நீங்கள் சமூகத்தின் அங்கமென்றவகையிலும் இதனைப் பற்றி

**திரு விவிலியத்திலிருந்து...**

**இரக்கமும் பரிவும் உள்ள இறைவன் சினம் கொள்ளத் தயங்குபவர் பேரன்பு மிக்கவர்: நம்பிக்கைக்குரியவர்.**

**(வி.ப 34:66)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்திருத்தல் சிறப்பானதாகும்.

நிலைமாறுகால நீதி (Transitional Justice) என்றால் என்ன? அவற்றிற்குள் அடங்கும் விடயங்கள் என்ன? அதன் பங்காளிகள் யார்? ஏன் நிலைமாறுகால நீதி அவசியமாகின்றது என்பதனை சற்று விரிவாக நோக்கலாம்.

இது உலகத்திற்கு புதிய விடயமல்ல 19ஆம் நூற்றாண்டிலிருந்து இன்றுவரை வரலாறுள்ளது. கடந்த காலத்தைக் கையாளுவது இரண்டாவது உலக மகாயுத்தத்தின் பின்னர் முக்கியத்துவம் பெற்றதாகும். ஐரோப்பிய மற்றும் சிலி, பெரு, கௌதமாலா மற்றும் ஆர்ஜன்ரீனா போன்ற லத்தீன் அமெரிக்க நாடுகள் ருவாண்டா, தென் ஆபிரிக்கா மற்றும் சீராலியோன் போன்ற ஆபிரிக்க நாடுகளிலும் கம்போடியா போன்ற ஆசிய நாடுகளிலும் மேலும் நேபாளம் போன்ற தெற்காசிய நாடுகளிலும் பிரயோகிக்கப்பட்டது பிரயோகத்தில் தற்போதும் உள்ளது.

ஒரு நாட்டில் பாரிய மோதல்கள் அல்லது யுத்தங்கள் நடைபெற்று அது நிறைவு கண்டிருப்பினும் தரப்புக்கள் மற்றும் மக்களிடையே நல்லிணக்கம் ஏற்படாது சமூக நிலையை அடையாத சந்தர்ப்பங்களில் பரஸ்பர கௌரவம் மற்றும் நம்பிக்கைகள் சீர்குலைக்கப்பட்டிருப்பதும் நிறுவனக் கட்டமைப்புக்களுக்கிடையேயான இடைத்தொடர்புகளும் துண்டிக்கப்பட்டிருக்கும். எனவே தான் இவ்வாறான நிலைகுலைவான நிலையிலிருந்து நீதியை நிலைநாட்டுவதற்காக ஏற்கெனவே நடைமுறையிலுள்ள நீதிக்கான பரிகாரங்களோ அல்லது நீதிப் பொறிமுறைகளோ சாத்தியமாகாது. ஆகவே தான் நிலை மாறுகால நீதிப் பொறிமுறையைப் பயன்படுத்துவதுண்டு. அதாவது சம்பிரதாய பூர்வமான நீதியைத் தாண்டிய விடயங்கள் அல்லது பொறிமுறைகள் அல்லது செயன் முறைகளை உள்ளடக்கியதான முறையைப் பயன்படுத்துவார்கள். அதாவது பொதுவாக இரண்டு காலங்களுக்கு இடைப்பட்டதை இடைக்காலம் என்கின்றோம். மறுகோணத்தில் யுத்தநிறைவு சூழலில் இது நிலை மாற்று காலம் எனப்படும். அவ்வகையில் இடைப்பட்ட காலத்தில் நீதியைப் பெற்றுக் கொடுக்க பயன்படுத்தப்படும் ஒரு முறையாகும். அதாவது கடந்த கால பாரதூரமான மனித உரிமை மீறல்களையும் அது சார்ந்த குற்றங்களையும் அனுபவங்க-ளையும் கையாளும் முறை

இது நீதி சார்ந்ததாக அல்லது நீதி சார்ந்ததல்லாத பொறிமுறைகளை உள்வாங்கும்.

இவை இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு விசாரணை நடத்தி தண்டித்தல், உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு, இழப்பீடுகள், பல வயையான நிறுவன சீரமைப்புகள் போன்றவற்றை உள்ளடக்கும்.

ஒரு அரசியல் மாற்றம் காரணமாக ஆட்சிக்கு வந்த புதிய அரசாங்கம் கடந்த கால அடக்கு முறை ஆட்சியில் நடைபெற்ற விளைவுகளை கையாள உருவாக்கும் சட்டப் பொறிமுறைகள் எவ்வாறாயினும் இவை அரசியல் அமைப்பை மையமாகக் கொண்டுதான் உறுதிப்படுத்தப்படல் வேண்டுமென்பது தேவைப்பாடாகும்.

### இது நான்கு தூண்களைக் கொண்டுள்ளது.

**உண்மையைக் கண்டறிதல்**

உலகத்தில் யுத்தம் மற்றும் மோதல்களால் பாரிய அழிவுகள் ஏற்பட்டிருக்கலாம் அல்லது மாறாத வடுக்கள் காயங்கள் காணப்படலாம். அவ்வாறான யுத்திற்குப் பின்னர் நடந்த உண்மைகளைத் தேடிப்பார்ப்பது மிக முக்கியமானதாகும்.. அப்போது தான் யுத்தத்திற்கான அடிப்படைக்காரணிகளைக் கண்டறிந்து மீண்டும் அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்கலாம். அவ்வாறே மோதல்கள் நடைபெற்ற காலத்தில் நடந்தது என்ன? அழிவுகளின் வகைகள் அல்லது எவ்வகையான அழிவுகள்? அப்போது தான் அதற்குப் பொறுப்பானவர்கள் யார் என்பதனை உறுதியாகவோ அல்லது யூகிக்கவோ முடியும். நடந்தவற்றை ஆராயாது நல்லிணக்கத்தை உருவாக்கவோ அல்லது வெற்றியையோ கண்டடையவோ முடியாதென்பது பொதுவான விதியாகும். ஆகவே போரின் தாக்கத்திற்குள்ளான நாடுகள் நடந்தவற்றை மீட்டிப் பார்ப்ப-துண்டு. பலவேளைகளில் அவை வேதனையைத் தருவதாக விருந்தாலும் உண்மை நிலையை மீட்டாது போனால் அது கருத்தற்றதாகவே போய்விடும்.




எனவேதான் இச் செயல்-முறைக்காக அரசின் பங்களிப்பு மற்றும் மதிப்பீடுகள் மட்டுமன்றி சமூகம்சார் அமைப்புக்கள் (Civil Society), புத்திஜீவிகள், தொழில்சங்க அமைப்புக்கள், மற்றும் ஊடகங்கள் பாரிய பங்களிப்பு செய்கின்றன.

சில வேளைகளில் உண்மை-யைக் கண்டறியும் ஆணைக்-குழுவோ அல்லது மனித உரிமை ஆணைக்குழுவோ அல்லது சமூகம் சார் சிவில் அமைப்பு-க்கள் ஊடாகவோ அல்லது சிறப்பு ஆணைக்குழுக்கள் அல்லது விசாரணைக்குழுக்கள் உண்மையைக் கண்டறிய ஏற்பாடு செய்யப்படுவதுண்டு. உதாரணமாக காணாமல் போனோருக்கான அலுவலகம் (Office of the Missing Person) பாராளுமன்றத்தால் உருவாக்கப்-பட்டமை மற்றும் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அமைத்தலுக்கான செயற்பாடுகள் தற்போது நடைமுறையிலு-ள்ளதும் குறிப்பிடத்தக்கது.

### நீதிக்கான உரிமை

மோதல்கள் நடைபெற்ற கால-கட்டத்தில் குற்றங்கள் இழைத்தவர்கள் அல்லது குற்றம் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது குற்ற வழக்கு தொடரப்பட்டு முறையான நீதி விசாரணைகளுக்குப்பின் தண்டனைகளைப் பெற்றுக் கொடுப்ப-தேயாகும்.

இவை உள்நாட்டிற்-குள்ளேயே காணப்-படும் நீதிமன்றப் பொறிமுறைகளின் ஊடாக அல்லது விசேட நீதிமன்றங்கள் மூலம் (Domestic) கலப்பு நீதிமன்றங்-களாக அதாவது தேசியம் (உள்நாட்டு) மற்றும் சர்வதேசம் கலந்ததான கட்டமைப்பு (Hybrid) பாரிய குற்றங்கள் அல்லது உள்நாட்டில் முறையாக விசாரிக்கப்படாத வேளையில் சர்வதேச குற்றவியல் வழக்குகள் மூலம் விசாரித்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இழப்பீடு/ பரிகாரம்**

பாதிக்கப்பட்ட நபரை அல்லது அவர்களின் உறவினரை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வருதல். இது தனிநபர் சுதந்திரத்தை, சமூகநிலையை, குடும்ப சூழலை, வாழ்விடத்தை, சொத்தை, வேலைவாய்ப்பை மீளளித்தல் மற்றும் சட்ட ஆதரவு தொடர்பானது. நிலையான நல்லிணக்கமொன்று ஏற்பட வேண்டுமாயின் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடானது வழங்கப்பட வேண்டும். அதாவது பாதிக்கப்பட்டவர்கள் தமது இழந்துபோன வாழ்க்கையை மறு சீரமைக்க இழப்பீடானது அத்தியாவசியமாகும். முழுமையான இழப்பீடுகள் அல்லது இழந்தவற்றிற்கு நிகரான இழப்பீடுகள் வழங்கப்படாவிடினும் அல்லது மீளப்பெற்றுக்கொடுக்க முடியாவிடினும் அதற்கு ஈடான இழப்பீடுகளை பெற்றுக் கொடுப்பது அவசியமாகும். இது நிதியாகவோ (பணமாகவோ) அல்லது வேறு விதமாகவோ அமையலாம். யுத்தமானது சொத்தழிப்புக்கள், உயிரிழப்புக்கள், அதற்கப்பால் மனக் கசப்புக்கள், மன அழுத்தங்கள் மற்றும் உளவியல் சார் தாக்கங்களாலும் பீடிக்கப்பட்டுள்ளதை யாரும் மறுப்பதற்கில்லை. நிலைமாற்றத்திற்கான நீதி செயல்முறையில் பின்வரும் சில இழப்பீட்டு வடிவங்கள் காணப்படுகின்றன.

- **நபர் மற்றும் பாதிக்கப்பட்ட குழுக்களுக்கு பணம் பெற்றுக் கொடுத்தல்**
- **சமூக நல சேவைகளூடாக மக்களுக்கு உதவுதல் (சுகாதாரம் மற்றும் கல்வி)**
- **உளவியல் சார் நடவடிக்கைகளும் செயற்பாடுகளும்**
- **உடைந்துபோன சமூகங்களை ஒன்றிணைத்தல்**
- **வாழ்விடம். வாழ்வாதாரம் மற்றும் சமூக கட்டமைப்பை நிலைபெறச்செய்தல்**

**மீள நிகழாமையை உறுதிப்படுத்தல்**

இது இருவகையுள் நோக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது

**கட்டமைப்புக்கள்/ நிறுவன ரீதியிலான சீர்திருத்தம்** (Institutional Reforms)

**நினைவுகூரல்** (Memerialization)

அரச இயந்திரப் பொறிமுறையினூடே வலிந்து திணிக்கப்பட்டு நிறுவனமையப்படுத்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் யுத்த அழிவிற்கான தொழில்நுட்பம் சார் பொறிமுறைகள் மற்றும் அவற்றை இயக்கும் கட்டமைப்புக்கள் மறுசீரமைக்கப்படல் வேண்டும். அதோடு இன்னுமொரு முரண்பாட்டுச் சூழ்நிலை ஏழாதவாறும் தண்டனையிலிருந்து தப்பிக்க க்கூடிய சூழல் ஏற்படாதவாறான நிலைகள் உறுதி செய்யப்படல் வேண்டும். எனவே கீழ்காணுமடிப்படையில் நிறுவன சீர்திருத்தங்கள் செய்வதுண்டு.

- **கட்டமைப்புசார் சீர்திருத்தம்**
- **கண்காணிப்பு**
- **சட்டரீதியிலான கட்டமைப்பு மாற்றம்**
- **ஆயுதங்கள் களைதல் மற்றும் படைகளை அகற்றல்**
- **கல்வியைப் பெற்றுக் கொடுத்தல்**

உலகத்தில இவ்வாறான நினைவுச் சின்னங்கள் மற்றும் நினைவு அருங்காட்சியகங்கள் பல காணப்படினும் ஓர் நினைவுத் துளி பார்வைக்கு!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அலை ஓசையில் விளம்பரம் செய்ய....**

தங்கள் வியாபார நிலையங்கள், திருமண வாழ்த்துக்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், ஞாபகார்த்த நினைவுகள் போன்ற எல்லா வகையான விளம்பரங்களையும் அலை ஓசையில் விளம்பரம் செய்யலாம்

| | | |
|---|---|---|
| பிற்பக்க முழுவண்ணப்படம் | ரூபா | 5000 |
| உட்பக்கம் (முழுப்பக்கம்) | ரூபா | 4000 |
| அரைப்பக்கம் | ரூபா | 2000 |
| காற்பக்கம் | ரூபா | 1000 |

தொடர்பு.
அலை ஓசை
17, அந்தோனியார் வீதி,
திருகோணமலை
0776771119

*trincoalaiosai@gmail.com*

***A|C NO; 79003336***
***(BANK OF CEYLON)***

2017ம் ஆண்டின் தை – பங்குனி அலையோசை அன்னையர் தின சிறப்பிதழாக வெளிவரவுள்ளது. அன்னையர் பற்றிய உங்கள் ஆக்கங்களை 2017.01.30ம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

ஆசிரியர்,
அலை ஓசை,
இல.17 அந்தோனியார் வீதி,
திருகோணமலை.

## அலை ஓசை இரண்டின் புதிர் போட்டி முடிவுகள்.

ஆடி, ஆவணி, புரட்டாதி 2016 அலை ஓசையில் வெளிவந்த க.பொ.த (சா.த) மாணவர்களுக்கான கத்தோலிக்கத்திருமறை புதிர்ப் போட்டி முடிவுகள்.

கிடைக்கப் பெற்ற விடைகளின் அடிப்படையில் சரியான விடை எழுதிய மாணவர்களில் இருந்து குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்பட்ட முதல் மூன்று அதிஸ்டசாலிகளின் பெயர் விபரம்.

**முதலாம் பரிசு: செல்வி. க.சுலக்கஷனா**
**(இருதயபுரப் பங்கு)**
**தி/திரு இருதய வித்தியாலயம். திருகோணமலை.**

**இரண்டாம் பரிசு: செல்வி. இருதயானந்தன் அனுஷியா**
**(இருதயபுரப் பங்கு)**
**தி/திரு இருதய வித்தியாலயம். திருகோணமலை.**

**மூன்றாம் பரிசு: செல்வன்.ப.சார்ள்ஸ் பேர்னாட்**
**(பாலையூற்றுப் பங்கு)**
**தி/புனித ஜோசப் கல்லூரி. திருகோணமலை.**

கத்தோலிக்கத்திருமறை புதிர்ப் போட்டியில் பரிசு பெற்றுள்ளீர்கள் தாங்களுக்கான பரிசுப் பணமான ரூ. 300.00 இத்துடன் வழங்கப்படுகிறது.

பங்குபற்றியவர்களுக்கும் பரிசு பெற்றவர்களுக்கும் அலை ஓசையின் பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்.
பரிசுகள் யாவும் உரிய பங்குத் தந்தையின் ஊடாக அனுப்பி வைக்கப்படுகிறது.

**அருட்பணி அ.றொஹான் பேர்னாட்**
**இயக்குனர்**
**அலை ஓசை கலைத் தொடர்பகம்**
**இல, 17 புனித அந்தோனியார் வீதி**
**திருகோணமலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுத்து வழங்கியவர் : சூசை எட்வேட்

# அநேகமானோர் நம்பும் சில மூடநம்பிக்கைகள் குறித்தான விளக்கங்கள்



### மகுடிக்கு மயங்கி ஆடுமா பாம்பு ?

பாம்பாட்டி மகுடியை ஊத அந்த ஓசைக்கு மயங்கி பாம்பு ஆடுவதைப் பார்த்திருக்கிறோம். மகுடிக்கு மயங்காத பாம்பும் உண்டோ என்றும் சொல்வார்கள். ஆனால் பாம்புக்கு காதில்லை – கேட்புலனே இல்லை! அப்படியிருக்க ஓசை நயத்துக் கேற்ப பாம்பு எப்படி ஆடுகிறது! பாம்பின் வயிற்றுப் பகுதியில் நுண்ணுணர்வு நரம்புகள் உண்டு. இருட்டில் அதன் பக்கமாக யாரும் நடந்து வரும் சில அதிர்வைக் கொண்டே அருகில் யாரோ வந்துவிட்டதை உணர்ந்து கொண்டுவிடும்! தற்காப்பை எண்ணி கொத்தி விடும்! பாம்பாட்டி குழலை வானம் பார்க்க மேலே பிடித்து ஊதினால் பாம்பு ஆடாது. அவன் மகுடியை குனிந்து கொண்டு மண் பார்த்து தான் ஊதுவான். நிலத்திலும் பாம்பின் மேலும் படும் காற்றழுத்தத்தால் பிறக்கும் அதிர்வின் மூலம் நுட்பமாக உணர்ந்து தான் இராகத்திற்கேற்ப ஆடுகிறது! ஊதுபவனும் இசைக்கேற்ப குழலை ஆட்டியும் காட்டுகிறான். இவைகளால் பாம்பு அழகாக ஆடிக்காட்டுகிறது.

### நல்ல பாம்பு ...

பாம்புகளில் கடுமையான விஷமுள்ளது நாக பாம்பு. ஆனால் அதைத்தான் நல்லபாம்பு என்று கன பேர் சொல்கிறார்கள். ஏனென்றால் அது அவ்வளவாக கொத்தாதாம். நல்லவர்கள் பார்த்து தவிர்த்துத்தான் கொத்துமாம். இது ஒரு மூட நம்பிக்கையே ஆகும் !

நாக பாம்பு மற்றப் பாம்புகள் போன்று உடனடியாக சீறிப்பாய்ந்து கொத்தாது. படமெடுத்து ஆடும், அப்படி ஆடும் போது குறித்த இலக்கையும், சந்தர்ப்ப சூழ்நிலைகளையும், தற்காப்பையும் நுட்பமாக அவதானித்துக் கொள்ளும். இதற்கு பாம்பிற்கு கொஞ்சம் நேர அவகாசம் தேவைப்படுகிறது... இது மனிதர் தப்புவதற்கோ, அதைக் கலைத்து விடவோ வாய்ப்பைக் கொடுத்து விடுகிறது.

இதனால் அதற்கு நல்ல பாம்பு என்ற நல்ல பெயர் கிடைத்து விடுகிறது. இந்த நல்ல பாம்பு கொத்தினால் தப்புவது அருமை.



### கரித்துண்டை வைப்பது ஏன்?

இரவுச் சாப்பாட்டை கட்டிக் கொண்டு வெளியே கொண்டு போகிறவர்களுக்கு கட்டுச் சாப்பாட்டின் மேல் கரித்துண்டை வைக்கும் வழக்கம் இன்னும் இருக்கிறது. இதில் விஞ்ஞான அறிவு இருக்கிறது...

இரவில் மரங்கள் கரியமில வாயுவை (காபனீரொட்சைட்டை) வெளிவிடும். காற்றுப் புகாத இடமும் உண்டா? இந்த நச்சுக்காற்று சாப்பாட்டை பழுதடையச் செய்து நஞ்சாக்கவும் கூடும். கரித்துண்டுக்கு கரியமில வாயுவை உறிஞ்சும் தன்மை உண்டு! ஆகையால் சாப்பாடு நச்சுத்தன்மை அடையாமல் பாதுகாக்கப்படுகிறது!....

நமது முன்னோர்கள் விஞ்ஞான அறிவை பெற்றிருக்க வேண்டும்! இல்லாவிட்டால் இது போன்ற பழக்கவழக்கங்கள் ஏற்பட்டிருக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிடுக்கிப் பொறியாகும் புதிய அரசியல் அமைப்பு

- - பொறியான்

புதிய அரசியல் அமைப்பை உருவாக்கும் பணியைத் தொடங்கியுள்ள நல்லாட்சி என்ற கோதாவில் களமிறங்கியுள்ள தற்போதைய அரசின் போக்கானது தமிழ் மக்களை மீண்டும் ஒரு பொறிக்குள் சிக்கவைக்கும் முயற்சியாகத் தென்படத்தொடங்கியுள்ளது.

இந்தப் பொறியை சரியாகப் புரிந்துகொள்ள தேர்தலுக்கு முன்னரான காலம் மற்றும் தேர்தலுக்குப் பின்னரான காலத்தைச் சரியாக கூர்ந்து நோக்க வேண்டியுள்ளது.

சனாதிபதித் தேர்தலுக்கு முன்னதான காலத்தில் தமிழ் மக்களின் வாக்குகளை ஒன்றிணைப்பதன் ஊடாகவே அப்போதைய சனாதிபதியான மஹிந்த ராஜபக்ச தோற்கடிக்கப்படுவார் என்பதைச் சரியாகப் புரிந்துகொண்ட ஆட்சி மாற்றத்தை விரும்பிய உள்ளக மற்றும் சர்வதேசத் தரப்புக்கள் அதற்கேற்ற வகையில் தமது காய்களை நகர்த்தியிருந்தன. அதற்கு அமையவே நூறு நாள் வேலைத்திட்டம் மற்றும் வாக்குறுதிகள் அள்ளி வீசப்பட்டன. ஆட்சி மாற்றமும் நிகழ்ந்தது. அந்த ஆட்சி மாற்றத்திற்குத் துணைபோன தமிழ் அரசியல் தரப்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நாடாளுமன்றத் தேர்தலிலும் வெற்றியடைய வைப்பதன் ஊடாகவே ஆட்சிக் கவிழ்ப்பு என்ற ஆபத்தைத் தற்போதைய அரசு எந்தச் சந்தர்ப்பத்திலும் எதிர்கொள்ளாது என்பதைச் சரியாகக் கணித்துக்கொண்ட ஆட்சி மாற்றத்தை விரும்பிய அதே தரப்புக்களின் காய் நகர்த்தல்களே நாடாளுமன்றத் தேர்தலின் போதான வாக்குறுதிகளாகத் தமிழ் மக்களிடையே அள்ளி எறியப்பட்டன.

அவ்வாக்குறுதிகளில், நில ஆக்கிரமிப்பை நிறுத்துவது, அரசியல் கைதிகளை விடுதலை செய்வது, வடக்குக்கிழக்கிணைந்த தாயகத்தில் பகிரப்பட்ட இறைமையுடன் கூடிய சமஸ்டி ஆட்சியை நிறுவுவது உட்பட பல உறுதிமொழிகள் உள்ளடங்கின.

நாடாளுமன்றத் தேர்தலிலும் அந்நகர்வுகள் வெற்றியடைந்தன.

அதுவரை அமைதியாக இருந்து நடப்பவற்றை சரியாகக் கிரகித்திருந்த சிங்களத் தரப்பு, இனப்படுகொலைக் குற்றச்சாட்டிலிருந்து தப்பித்துக் கொள்ளும் தனது நடவடிக்கைகளைத் தொடங்கிய புள்ளியாகவும், தேர்தலின் ஊடாகத் தமிழ் மக்களால் தேர்வானவர்கள் தெரிவித்திருந்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தேவையானதாகவும், ஐ.நா. வின் மனித உரிமைச் சபையின் தீர்மானங்களை செயற்படுத்துவதைத் தள்ளிப்போடச் செய்வதற்காகவும் பாவித்த அதி உச்சத் தந்திரோபாய ஆயதம் புதிய அரசியலமைப்பு என்பதாக அமைந்தது.

எனினும், “ஒற்றையாட்சிக்குள் தீர்வு'', ‘‘வடக்கையும் கிழக்கையும் இணைக்கப் போவதில்லை” ‘‘இறைமையைப் பகிர முடியாது” என்றே இன்றுவரை சனாதிபதி மற்றும் பிரதமர் உட்பட சிங்கள அரசியற் பிரதானிகளால் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

இனமுரண்பாட்டுக்கான அடிப்படையாக இருக்கின்ற மேற்சொல்லப்பட்ட மூன்று விடயங்களையும் நீக்காமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அரசியல் அலசல்

உருவாக்கப்படப்போகின்ற புதிய அரசியல் அமைப்பால் என்ன தமிழ் மக்களுக்குக் கிடைக்கப்போகின்றது????

இக்கேள்விக்கான பதிலாகத் தற்போதும் பலரது வாயில் உச்சரிக்கப்படும் சொல்லாக இருப்பது "அதிகாரப்பரவலாக்கம்" என்பதே!

அதாவது 13வது திருத்தச் சட்டத்தின் ஊடாக உருவாகிய மாகாண சபைகளிற்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் காணி மற்றும் காவல்துறை அதிகாரங்கள் உட்பட சில பல அதிகாரங்களை பரவலாக்குவதே புதிய அரசியலமைப்பின் உள்ளீடாக இருக்கப் போவதாக அதே அரசியற் பிரதானிகளின் வாய்ச்சொற்களில் இருந்து தெரிந்து கொள்ள முடிகின்றது.

மாகாணசபைகளிற்கு அதிகாரங்களை மேலும் பகிர வேண்டுமாயின் 13வது திருத்தச்சட்டத்தினைப் பாதிக்கின்ற சட்ட மூலங்களை மட்டும் இல்லாதகற்றி மற்றொரு சட்ட மூலமொன்றை உருவாக்குவதன் ஊடாக வழங்கும் வாய்ப்பிருக்கும் போது ஏன் அரசியலமைப்பை புதிதாக வரைய ஸ்ரீலங்கா முனைகின்றது என்பதை நுண்ணாய்வு செய்யும் போதே அச்சொல்லாடல் ஒரு கிடுக்கிப்பொறியாகத் தமிழ் மக்களை நசுக்கப் போகின்றது என்பதை புரிந்துகொள்ள முடிகின்றது.

அதாவது இன்று தமிழ் மக்களின் இனவழிப்பிற்காக நியாயம் கோரிநிற்கின்ற அனைத்துத் தரப்புக்களையும் ஒரு மாயவலைக்குள் வீழ்த்தி அதனில் இருந்து தனது போர்க்குற்றத்தையும் மறைத்து தமிழ் மக்கள் ஒரு தேசமாக வாழும் நிலப்பரப்பையும் விழுங்கி ஏப்பமிடும் அடிநாதமொன்று அச்சொல்லாடலுள் பொதிந்து கிடப்பது புரிகின்றது.

தாயகப் பிரதேசத்தின் இணைப்பு இல்லை, சுயநிர்ணய உரிமையில்லை, சமஸ்டி ஆட்சியில்லை எனில் புதிய அரசியலமைப்பின் ஊடாக எதனைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கின்றது எம் தமிழ் சமூகம்??



## திருத்தந்தை செய்திகள்




உடன்பிறந்த உணர்வு, பகிர்வு, வரவேற்பு, ஒருங்கிணைவு ஆகிய மனநிலைகளைக் கற்றுக்கொள்ள, கிறிஸ்மஸ் குடில் நம்மை அழைக்கிறது என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன்னைச் சந்திக்க வந்திருந்த மால்ட்டா நாடு, மற்றும், இத்தாலியின் திரிதெந்து (Trent) பகுதி மக்களிடம் கூறினார்.

புனித பேதுரு பசிலிக்கா வளாகத்தில், இவ்வாண்டு, கிறிஸ்து பிறப்பு காட்சியையும், கிறிஸ்மஸ் மரத்தையும், உருவாக்கியுள்ள மால்ட்டா நாடு மற்றும் திரிதெந்து பகுதியைச் சேர்ந்த 1500க்கும் மேற்பட்டோரை, இவ்வெள்ளி காலை, அருளாளர் ஆறாம் பவுல் அரங்கத்தில் சந்தித்த திருத்தந்தை, இவ்வாறு கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழிலக்கிய ஆய்வு

# இலக்கிய ஓசை



**கேணிப்பித்தன் ச. அருளானந்தம்**

*கடந்த இதழின் தொடர்ச்சி.....*

கடந்த இலக்கிய ஓசையில் பழந்தமிழ் இலக்கியங்களைப் பற்றி மேலோட்டமாகச் சில விடயங்களை உங்களை உற்சாகப் படுத்துவதற்காகச் சொல்லியிருந்தேன். இந்த இதழில் இலக்கிய ஓசையில் சற்று விளக்கங்களைத் தரலாம் என்று நினைக்கின்றேன்.

பழந்தமிழகத்தில் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்தார்கள். பல புலவர்கள் பல்லாயிரக் கணக்கான நூல்களை இயற்றி அரங்கேற்றினர். காலத்துக்கு காலம் கடற்கோள்கள் ஏற்பட்டு அனர்த்தங்களைக் கொடுத்தன. நாடு. நகர், மாட மாளிகைகள் அழிந்தன. உயிர் தப்பியவர்கள் இடப்பெயர்வுகளுக்கு உள்ளானார்கள். மூன்று சங்கங்கள் இருந்ததாக இலக்கியங்கள் வாயிலாக அறிகிறோம். இச் சங்க காலத்தில் தோன்றிய நூல்களைச் சேர்த்துத் தொகுத்-தனர். அவ்வாறு தொகுக்கும் போது அக்காலத்தில் நிலவிய பண்புக்கேற்ப அகத்துறைப் பாடல்களை வேறாகவும், புறத்தொகைப் பாடல்களை வேறாகவும் தொகுத்தனர்.

இவ்வாறு தொகுக்கப் பட்டவற்றை பத்துப் பாட்டு, எட்டுத் தொகை என்று பெயரிட்டனர். ஏன் இவ்வாறு பாகுபாடு செய்தனர்? அகத் துறைப்பாடல்கள் உள்ளத்தால் உணர்ந்து அனுபவிக்கத் தக்கன. அவை அன்பு, காதலின்பத்தைப் பெரிதும் புலப்படுத்துவன. தலைவன், தலைவி, செவிலி எனப் பலரும் வருவர். பலகதா மாந்தர்கள் உலாவருவர். அவர்கள் தம் உள்ளக் கிடக்கைகளை வெளிப்படுத்தி படிப்போரின் உள்ளங்களில் அந்நிகழ்வுகளைப் பரவச் செய்வர். அவர்களின் உரையாடல்கள் அற்புதமாக இருக்கும். உரையாடுபவர்களின் பெயர்கள் இடம்பெறாமை ஒரு பண்பாகும். அவ்வாறு பெயர் சுட்டினால் அப்பாடலை புறத் துறைக்குள் அடக்கப்படும்.

புலவர்களின் பாடல்களைப் படித்து இலக்கண நூல்களை எழுதினர். தொல்காப்பியர் தோன்றித் தமது தொல்காப்பிய நூலை இயற்றினார். சங்க இலக்கியத் தொகுப்பின் பாடல்களை ஆராயும்போது, பழைய இலக்கிய மரபுகள் இருந்து வந்த உண்மை புலப்படும். பழங்காலத்தில் பனையோலைகளைப் பதப்படுத்தி எழுத்தாணியால் எழுதப்பட்டன. அவைகளுள் பல காலவெள்ளத்தால் அழிந்துபட்டன. எஞ்சிய வற்றையாவது காப்பாற்றும் நோக்கில் புலவர்களும், புரவலர்களும் அவற்றைத் தேடியெடுத்து படியெடுத்து வைத்தனர்.

அவற்றின் மரபு கருதி அகம், புறம் என வேறாக்கித் தொகுத்தனர். அவ்வாறு தொகுக்கப்பெற்ற நூல்களே எட்டுத் தொகை என்றும் பத்துப் பாட்டு என்றும் நமக்குக் கிடைத்தன.

புறப்பொருளைக் கருவாகக் கொண்ட பாடல்கள் தலைவன், தலைவி பெயர் சுட்டி வருவன. தலைவனின் வீரம், கொடை முதலியவற்றைக் கூறுவனவாகவும், புலவர் கூற்றாகவும் அமைந்திருக்கும். இவ்வாறு அமைந்த பாடல் வகைகளைப் பத்துப் பாட்டு, எட்டுத் தொகை என வரையறை செய்தனர்.

**எட்டுத்தொகை நூல்கள் :**

**நற்றிணை, குநற்தொகை,**
**ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து,**
**பரிபாடல், கலித்தொகை, அகநானூறு,**
**புறநானூறு** என எட்டாகும்.
இதனை கீழ் வரும் பாடல் மூலம் அறியலாம்.

**'நற்றிணை நல்ல குறுந்தொகை**
**ஐங்குறுநூறு**
**ஒத்த பதிற்றுப் பத்து ஓங்கு பரிபாடல்**
**கற்றறிந்தார் ஏத்தும் கலயொடு அகம்**
**புறம் என்று**
**இத்திறத்த எட்டுத் தொகை'**

எனக் கூறுவர்.

இந்த எட்டு நூல்களில் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை அகநானூறு ஆகிய ஐந்தும் அகப்பொருட் பாடல்களை உள்ளடக்கியுள்ளன. புறநானூறு, பதிற்றுப்பத்தும் புறப்பொருள் கூறுவன. பரிபாடல் அகம், புறம் அகிய இரண்டையும் சுட்டுவன. இந்த எட்டுத் தொகை நூல்களிலும் காலத்தால் முந்தியது புறநானூறு ஆகும். ஆனால் முதலில் தொகுக்கப்பட்டது குநற்தொகை ஆகும் என்று தமிழாய்ந்தோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய ஓசை

கருதுவர்.

பத்துப்பாட்டுக்களாவன: திருமுருகாற்றுப்படை, பாருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம், என்பவையாம். இவற்றை ஒரு பாட்டினால் குறிப்பிடுவர்.

**'முருகு. பொருநராறு. பாண் இரண்டு. முல்லை**
**பெருகு வளமதுரைக் காஞ்சி. மருவினிய**
**கோல நெடுநல்வாடை. கோல் குறிஞ்சி. பட்டினப்**
**பாலை. கடாத்தொடும். பத்து'** என்பர்

இந்த எட்டுத்தொகையில் உள்ள தொகை நூல்களில் நற்றிணை நூலே முதலில் தொகுக்கப்பட்டது என அறிகிறோம். நற்றிணையில் இருந்து ஒரு காட்சியை முதலிற் பாரப்போம்.

அகப்பொருட் சிறப்பையும், தலைவி, தலைவன் மேல் கொண்ட தன்னிகரற்ற அன்பையும் இப்பாடல் காட்டுகிறது. நம் நாட்டு இளைஞர்கள் வீட்டையும் சகல இன்பங்களையும் துறந்து வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர். அன்றும் இப்படித்தான். தலைவன் பொருள் தேடுவதற்காகப் பிரிந்து சென்றுவிட்டான். அவன் வரவை எதிர்பார்த்து அவனை நினைந்து வருந்தி உருகி மெலியும் தலைவி தனது உயிர் பிரிந்துவிடுமோ என்று அஞ்சுகிறேன். தோழி தான் சாவதற்கு அஞ்வில்லை. ஆனால் இறந்துபட்டால் பின்னர் எடுக்கும் மறுபிறவியில் என் தலைவனை மறந்து இழக்க நேருமோ? என்றே அஞ்சுகிறேன் என்பதாக அமைகிறது அப்பாடல்.

**"சாதல் அஞ்சேன் அஞ்சுவல் சாவில்**
**பிறப்புப் பிறிது ஆகுவது ஆயின்**
**மறக்குவேன் கொல்லென் காதலன் எனவே"**

அற்புதமான இக் காட்சியை தலைவி வாயிலாகப் புலவர் கூறுகிறார். அதே போல் குறுந்தொகையில் இன்னுமொரு காட்சியைப் பார்ப்போம்.

'தோழி! மலைப்பக்கத்தில் உள்ள பெரிய கிளைகளையுடைய குறிஞ்சியின் மலர்களை கொண்டு, பெரிய தேன்கூடுகளை வண்டுகள் செய்வதற்கு இடமாகிய நாட்டினனான நம் தலைவனோடு நான் கொண்ட நட்பானது இந்த நிலத்தைவிடவும் அகலமானது. அந்த வானைவிடவும் உயர்ச்சியானது. ஆழமான கடலைவிடவும் ஆழமானது. எனது மனத்தேரில் அவனே உள்ளான்' என்பதை அறிவாயாக எனத் தன் தோழியிடம் தலைவி கூறுகிறாள்.

**"நிலத்திலும் பெரிதே வானிலும் உயர்ந்தன்று**
**நீரினும் ஆர் அளவின்றே - சாரல்**
**கருங்கோற் குறிஞ்சிப்பூ கொண்டு**
**பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே"**

இப்பாடல்களில் யாருடைய பெயர்களும் சுட்டப்படவில்லை. புலவர் பாத்திரங்கள் ஊடாக உரையாடலைச் செய்கிறார்.

கீழ்வரும் பாடலைப் பாருங்கள். சூரியன் மேற்கு வானில் சாய்ந்த நேரத்தில் வானத்தில் பறந்து செல்லும் பறவைக் கூட்டத்தைப் பார்த்துப் பாடும் பாடலாகத் தெரியும். இப்பாடலை வெறுமனே படித்தால் பொருள் விளங்காது. பாடிய புலவர் பாடலை எழுதி ஒரு குறிப்பும் கீழே எழுதுவார். அதாவது "இது காதலால் வாடிய காதலி தன் தலைனுடைய பிரிவால் மிக வாடி சாயுங்காலப் பொழுது கண்டு வருந்திக் கூறியது." என்று கருத்துப்படக் குறிப்பு எழுதியுள்ளார். அந்தக் குறிப்பைக் கொண்டே இது காதல் பற்றிய கற்பனையுடைய அகப்பாருள் பாட்டு என்று விளங்கும்.

**"ஞாயிறு பட்ட அகலவாய் வானத்து**
**அளியதாமே கொடுஞ்சிறைப் பறவை**
**இறையுற ஓங்கிய நெறி அயல் மரா அத்த**
**பிள்ளை உள் வாய்ச் செரீஇய**
**இரைகொண் டமையின்**
**விரையுமால் செலவே"**

புறப்பொருள் பற்றிக் கூறும் போது பெயர் சுட்டிப் பாடப்படும். புறப்பொருள் பற்றிய சான்றுக்கு கீழ்வரும் பாடல் சிறந்ததாகும். பேகன் பேர்பெற்ற வள்ளலும் வீரனுமாவான். அவன் ஈர நெஞ்சொடு கேட்டோர் அனைவருக்கும் வாரி வழங்குபவன்.. அவனை புலவர் ஒருவர் அவனை மழைக்கு ஒப்பிட்டார். மழை பெய்யும்போது குளத்திலும், வயலிலும், பயன்படாத உவர் நிலத்திலும், பொழிகிறது. மழைக்குள்ள அறியாமை பேகனிடத்திலும் இருந்தது என்கிறார் புலவர்.. பேகனிடம் கொடைமடம் இருந்ததே தவிர, படைமடம் இல்லை என்று கூறி அவனுடைய கொடை, வீரம் ஆகிய இரு சிறப்புகளையும் ஒருங்கே புகழ்ந்து பாடினார்.

இதோ அந்தப்பாடல்

**அறுகுளத்து உகுத்தும் அகல்வயல் பொழிந்தும்**
**உறுமிடத்து உதவாது உவர்நிலம் ஊட்டியும்**
**வரையா மரபின் மாரி போலக்**
**கடாஅ யானைக் கழற்கால் பேகன்**
**கொடை மடம் படுதல் அல்லது**
**படைமடம் படான் பிறர் படைமயக் குறினே.** — என அமைகிறது அப்பாடல். இப்பாடல் பேகனின் பெயரினைச் சுட்டி நிற்பதால் புறப்பொருள் துறையினுள் அடக்குவர். இதுதான் நமது இலக்கிய மரபாகும்.

**தொடரும்....**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதுமையில் தனிமை

தேடி வரும் உறவுகளால்
தேய்பிறையாகும் நிசப்தங்கள்
விருந்தோம்பி நிற்பதாலே
விடைபெறும் விசனங்கள்

விழி விரித்து வரவேற்று
பழங்கதை பல பேசி
அறுசுவை விருந்தளித்து
பரிமாறி உளம் குளிர்ந்து

வாழ்த்தி வழியனுப்பி விட்டு
மீண்டும் தனிமையாலே
மாட்டிய மின்விசிறியைப் போல்
மனம் அடங்குது கூட்டினுள்ளே.

அந்தகார இருளினிலே
ஓசைகள் பயமுறுத்த
திகிலது விழிபிதுங்க
சிரத்துள்ளோ சில்வண்டு.

நிதம் தப்பி எகிறி நிற்கும்
இதயத் துடிப்பினாலே
என்றோ வரும் மரணம்
இன்று வந்தால் நான் சரணம்

வீரன் சாவு ஒரு நாளே
கோழைக்கோ நிதம் சாவு
இனியொரு பிறப்பிருந்தால்
இறைவா வீரமாய் பிறக்க விடு.



தெல்மா
சடகோபன்





## கறிவேப்பிலையிலுள்ள சத்துக்கள்

நன்றி – நல்வழி

ஐம்பது கிராம் கறிவேப்பிலையில் அடங்கியிருக்கும் ஊட்டச்சத்துக்கள்...

| | |
|---|---|
| சுண்ணாம்புச் சத்து | 415 mg |
| மக்னீசியம் | 110 mg |
| இரும்பு | 66 mg |
| தாமிரம் | 0.11 mg |
| கந்தகம் | 40 mg |
| குளோரின் | 100 mg |

இயற்கையன்னை வழங்கியிருக்கும் மூலிகைச் செல்வங்களே நோயகற்றும் நன் மருந்துகளாகும்.
அத்தகைய செல்வங்களில் கறிவேப்பிலையும் ஒன்றாகும்.

### விவேகானந்தரின் சிந்தனை





பிறர் முதுகுக்கு
பின்னால்
நாம்
செய்ய வேண்டிய
வேலை
"தட்டிக் கொடுப்பது
மட்டும் தான்"

-விவேகானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# கிறிஸ்தவ நாகரிகம்



## கிரேக்க மொழி :—

- **கி**ரேக்க மொழி இந்தோஜரோப்பிய மொழிகளுள் ஒன்றாகும்.
- இலத்தின், சமஸ்கிருதம், ஜெர்மானிய ஆகிய மொழிகளுடன் தொடர்புடையது.
- இசைபோல் இனிமையுடைய இம்மொழி ஏராளமான வடிவ வேறுபாடுகளையுடைய சொற்களைக் கொண்டுள்ளது.
- கிரேக்க மொழியும், கிரேக்க நாகரிகம் போன்றே சிறப்பாக வளர்ச்சி பெற்றிருந்தது.
- கிரேக்க விஞ்ஞானிகளாலும், ஆய்வாளர்களாலும் சிந்தனையாளர்கள், கலைஞர்களாலும், ஏனைய துறைசார் கண்டு பிடிப்புக்களாலும் தங்கள் முடிவுகளையும், கண்டு பிடிப்புக்களையும், ஆய்வுகளையும், அவைசார் கருத்துக்களையும், ஏனையோருக்கு வெளிப்படுத்தும் போதும், விளக்கமளிக்கும் போதும், தம் தாய் மொழியாகிய கிரேக்க மொழியையே பயன்படுத்தினர். இதனால் மொழியின் சொல்வளம் பெருகுவதற்கும் பல புதிய சொற்களின் தோற்றத்திற்கும் வழியேற்பட்டது.
- விஞ்ஞான அல்லது மெய்யியல் சிந்தனையின் வரைவிலக்கண முறையில் சிந்திக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும் போது மிகச் சரியான சொற்பதம் பாவிக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது.
- பல விடயங்களை விளக்கும் போது மொழி வளமும், வசன நடையும் மொழியின் ஏனைய இயல்புகளும் வளர்ச்சி பெறுகின்றன.
- மகா அலெக்சாண்டரின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளிலும், அவனது ஆட்சியிலும் அதனைத் தொடர்ந்தும் கிரேக்க மொழி செல்வாக்குப் பெற்ற மொழியாகத் திகழ்ந்தது.
- உரோமய, பைசாந்திய பேரரசுகளில் இம்மொழி சிறப்புற்று விளங்கியது.
- உரோமப் பேரசும் மேலவையும் தங்களுக்கு வேண்டிய சட்டங்களை ஆக்குவதற்கு கிரேக்க மொழியையே பயன்படுத்தினர்.

## கிரேக்க மொழியில் திருவிவிலியம் :—

**ப**லஸ்தீனர் பல அன்னிய படையெடுப்புக்களுக்கும் ஆட்சி அதிகாரங்களுக்கும் அடிமைகளாக இருக்க வேண்டிய நிலை உருவாகியது. அதனடிப்படையில் எகிப்தியர், அசீரியர், பபிலோனியர், பாரசீகர், கிரேக்கர், உரோமயர் ஆகியோரின் ஆளுகைக்கு உட்பட்டனர்.

இவ்வாறான வரலாற்றுப் பின்னணி இஸ்ரயேல் மக்களின் கலாசாரத்திலும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தின.

இம்மாற்றம் அவர்கள் மொழியிலும் ஏற்பட்டதன் விளைவாக எபிரேய மொழியை படிப்படியாக மறந்து, பபிலோனியாவில் பேசப்பட்ட அரமேய மொழி யூதர்களின் பேச்சு மொழியாக மாறியது. இந்நிலையில் எபிரேய மொழியில் எழுதப்பட்ட வேதாகமத்தைப் படித்து பயன் பெற முடியாத நிலை தோன்றியது.

எனவே அரமேய மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட திருவிவிலியத்தை 'தார்கும்' (Targum) என்று அழைத்தனர்.

கி.மு 333 முதல் கி.மு 63 வரையான காலப்பகுதி கிரேக்க மன்னன் அலெக்சாண்டரின் தலைமையின் கீழ் கிரேக்கரின் ஆட்சிக்குட்படுத்தப்பட்டதால். கிரேக்க கலாசாரம் எகிப்து முதல் அப்கானிஸ்தான் வரை பரவியது.

இக்காலப் பகுதியில் சாதாரண மக்கள் 'கொய்னே' எனும் கிரேக்க மொழி பேசினர். கிரேக்க மொழி தெரியாதோர் நாகரிகமற்றோர் எனக் கருதப்பட்டனர்.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் கிரேக்க ஆட்சியின் கீழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல இடங்களிலும் பரவி வாழ்ந்த யூதர்கள், கிரேக்க கலாசாரத்தின் செல்வாக்கிற்கு உட்பட்டவராகவும் கிரேக்க மொழியை நன்கு அறிந்தவர்களாகவும் காணப்பட்டனர்.

பழைய ஏற்பாட்டு நூல்கள் பெரும்பாலானவை எபிரேய மொழியில் எழுதப்பட்டாலும் சில நூல்கள் அரமேய மொழியிலும், சில நூல்கள் கிரேக்க மொழியிலும் எழுதப்பட்டுள்ளன.

மக்கபேயர் இரண்டு நூல்களும், சாலமோனின் ஞான நூலும், புதிய ஏற்பாட்டின் எல்லா நூல்களுமே கிரேக்க மொழியில் எழுதப்பட்டன.

கிரேக்க மொழி திருவிவிலியத்தில் தாக்கம் செலுத்தியுள்ளது என்பதற்கு இது சிறந்த எடுத்துக்காட்டாகும்.

பழைய ஏற்பாடு முழுவதும் கிரேக்கத்தில் மொழி பெயர்க்க வேண்டிய வரலாற்றுத் தேவை ஏற்பட்டது. கிரேக்கத்திற்கு மொழி பெயர்க்கப்பட்ட பழைய ஏற்பாட்டு நூல் 'செப்துவாஜிந்து' அல்லது 'எழுபதின்மர்' நூல்கள் என்ற கிரேக்க மொழி பெயர்ப்பு பல இடங்களிலும் சிதறி வாழ்ந்த யூதர்களுக்குப் பெரும் ஆறுதலாக இருந்தது.

கிரேக்க மொழி பெயர்ப்பு (செப்துவாஜிந்து) திருச்சபையின் வரலாற்றில் குறிப்பாக தொடக்கத் திருச்சபையில் மிக முக்கிய நூலாகக் கருதப்படுகின்றது.

திருத்தூதர்களும் ஆரம்ப கிறிஸ்தவர்களும் இம் மொழிபெயர்ப்பை அதிகம் பயன்படுத்தியுள்ளனர்.

இம்மொழி பெயர்ப்பின் அதிகாரப் பூர்வத் தன்மை திருச்சபையின் கிரேக்க இலத்தீன் தந்தையர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.



**புதிய ஏற்பாடு கிரேக்க மொழியில் எழுதப்பட்டது. யோவான் நற்செய்தியிலும் பவுலின் எழுத்துக்களிலும் கிரேக்கத் தாக்கம் அதிகம் காணப்படுகின்றது.**

## கிடைக்கப் பெற்றோம்




**"தாலந்து"**

திருமதி. சுரேந்தினி மணிவண்ணன் ஆசிரியை அவர்களினால் கடந்த 20.11.2016 ம் திகதி திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரி கலையரங்கில் "தாலந்து" என்ற 10ம் தர கத்தோலிக்க திருமறை பாட வினாவிடை நூல் வெளியிடப்பட்டது. தி / புனித சூசையப்பர் கல்லூரியில் ஆசிரியையாக கடமையாற்றும் இவர் 2015ம் ஆண்டில் க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான "திறவுகோல்" என்ற வினா விடை நூலையும் வெளியிட்டிருந்தார்.

கத்தோலிக்க பாடத்திற்கென வேறு பயிற்சி நூல்கள் வெளியிடப்படாத நிலையில் மிகவும் நுணுக்கமாக தயாரிக்கப்பட்ட இந்த நூல்கள் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு பெரிதும் பிரயோசனமானதாகும்.

தொடர்புகளுக்கு :-
43, வேளாங்கண்ணி வீதி, பாலையூற்று
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரக்கத்தின் ஆண்டின் நிறைவு விழா

இரக்கத்தின் ஆண்டின் நிறைவையொட்டிய பல்சுவை கதம்ப விழா கடந்த 2016.11.20ம் திகதி தி/உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி கலையரங்கில் நடைபெற்றது.

"அலை ஓசை" கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இவ் விழாவில் பிரதம அதிதியாக பேரருட்திரு ஆயர் கலாநிதி. நோயல் இம்மானுவல் ஆண்டகை அவர்களும், கௌரவ விருந்தினராக கிழக்குப் பல்கலைக் கழக விரிவுரையாளர் அருட்பணி ஏ.ஏ.நவரெட்ணம் அடிகளாரும், விசேட விருந்தினராக கிழக்கு மாகாண மின்சார சபை பிரதம பொறியியலாளர் திருமதி.இக்னேஷியா சுஜந்தா பெலிசியன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

அலை ஓசை கலைத் தொடர்பகத்தினால் 2016ல் நடத்தப்பட்ட கிராமிய நடனப் போட்டி, மேற்கத்தைய நடனப் போட்டி, நவீன நாடகப் போட்டி, கரோல் போட்டிகளில் முதலிடத்தைப் பெற்ற அம்சங்கள் மேடையேற்றப்பட்டன.

## மறை மாவட்ட மேய்ப்புப் பணிச் சபை மாநாடு

திருகோணமலை மறை மாவட்ட மேய்ப்புப் பணிச் சபை மாநாடு கடந்த 2016.11.26ம் திகதி உப்புவெளி மேய்ப்புப் பணி நிலையத்தில் பேரருட் திரு ஆயர் கலாநிதி. நோயல் இம்மானுவல் ஆண்டகை அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பங்குத் தந்தையர்கள், அருட் தந்தையர்கள், அருட் சகோதரர்கள், அருட் சகோதரிகள், பொது நிலையினர் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர். இம் மாநாட்டில் 2017ம் ஆண்டின் புனித ஜோசப்வாஸ் அவர்களின் ஆண்டாக பிரகடனப்பட்டதற் கிணங்க அதற்கான திட்டங்கள் பற்றி ஆராயப்பட்டன.

தெரிவு செய்யப்பட்ட 2017, 2018 ம் ஆண்டுகளுக்கான நிர்வாக சபையினர் விபரம்.

**தலைவர்** : பேரருட் திரு ஆயர் கலாநிதி. நோயல் இம்மானுவல் ஆண்டகை

**செயலாளர்** : திரு. சி. சந்திரகுமார்

**உப – செயலாளர்** : திருமதி. புஸ்பலதா ஜோசப்

**பொருளாளர்** : திரு. எஸ். அன்ரனிதாஸ்

**ஏனைய உறுப்பினர்கள்** : குரு முதல்வர் – அருட் தந்தை கிங்ஸ்லி றொபர்ட்
மற்றும் ஆணைக்குழுக்களின் இயக்குனர்கள்

திரு. நாதன் சுரேஸ்
செல்வி. கிருசாந்தா குரூஸ்
அருட் சகோதரி. எம். நிரோசா அ.கா
அருட் தந்தை. யேசு ரமேஸ் அ.ம.த

**கணக்காய்வாளர்கள்** : திரு. பொனி செபஸ்தியான்
திருமதி. ஆர். வேர்ஜின்

அத்தோடு மறை மாவட்டத்தில் சேவை புரிந்து வரும் பின்வரும் மூவர் கௌரவிக்கப்பட்டனர். திரு. ஜீ.ஏ. பிரான்சிஸ், செல்வி யூப்பிரசியா பல்தசார், திரு. வென்ஸ்லோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிர் போட்டி - 04

பெயர் : ..........................................................

பாடசாலை : ..................................................

..........................................................................

பங்கு : ...........................................................

## தேர்ச்சி - 03

தரம் 10 - பாடங்கள் 12 தொடக்கம் 15 வரை
தரம் 11 - பாடங்கள் 12 தொடக்கம் 17 வரை

**மிகச் சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1. கிறிஸ்துவின் மறையுடல் என அழைக்கப்படுவது?
   அ. திருமுழுக்கு ஆ. அன்பியம்
   இ. திருமணம் ஈ. திருச்சபை

2. வனத்துப் பிதாக்களுள் முதன்மையானவர் யார் ?
   அ. திருமுழுக்கு யோவான் ஆ. தூய வனத்து அந்தோனியார்
   இ. தேப்ஸ் சின்னப்பர் ஈ. தூய பக்கோமியுஸ்

3. கத்தோலிக்க திருமணத்தின் அதிமுக்கிய நோக்கங்களாக அமைபவை எவை?
   அ. பொறுமை, இரக்கம் ஆ. தியாகம், ஆசை
   இ. அன்புறவு, மகப்பேறு ஈ. ஒற்றுமை, நேர்மை

4. நற்செய்தியாளர் நால்வரும் குறிப்பிட்ட ஒரேயொரு அருங்குறி எது?
   அ. தண்ணீரை இரசமாக்கியமை ஆ. இலாசரை உயிர்ப்பித்தமை
   இ. அப்பங்களைப் பலுகச் செய்தமை ஈ. கடலை அடக்கியமை

5. தூய மக்ஸிமிலியன் கோல்பே அடிகளார் எழுதிய நூல்கள் எவை?
   அ. உண்மை, போர்வீரர் ஆ. உண்மை, படைத்தளபதி
   இ. சிறந்த மனிதர், மானிடம் ஈ. போர்வீரர், சத்தியம்

6. இயேசுவின் இறுதி இராவுணவு வேளையில் அவரால் நிறுவப்பட்ட அருளடையாளங்கள் எவை?
   அ. உறுதிப்பூசுதல், ஒப்புரவு ஆ. திருமணம், குருத்துவம்
   இ. நற்கருணை, குருத்துவம் ஈ. நற்கருணை, திருமுழுக்கு

7. பயத்தினால் மனம் வருந்துவதால் பாவங்களுக்கு மன்னிப்பு....
   அ. கிடைக்கும் ஆ. கிடைப்பதில்லை இ. கிடைக்கலாம் ஈ. கிடைப்பது நிச்சயமில்லை

8. திருத்தொண்டர் நிலையிலுள்ளவர்களின் பணியாக அமையாதது எது?
   அ. மரணச்சடங்கை நடத்தல் ஆ. நற்கருணை ஆசீரளித்தல்
   இ. திருமுழுக்கு கொடுத்தல் ஈ. திருப்பலி நிறைவேற்றல்

9. பாஸ்கா மெழுகுவர்த்தி எதன் அடையாளமாக விளங்குகின்றது?
   அ. உயிர்த்த கிறிஸ்துவின் ஆ. தூய ஆவியானவரின்
   இ. அனைத்து தூயவர்களின் ஈ. கல்லறை ஆண்டவரின்

10. துறவறத்தவரின் வாழ்க்கை நிலைகள் எவை?
    அ. குழுவாழ்வு, இல்லற வாழ்வு ஆ. பணி வாழ்வு, தனி வாழ்வு
    இ. செப வாழ்வு, குழுவாழ்வு, பணி வாழ்வு ஈ. தனி வாழ்வு, செப வாழ்வு

இப்பக்கத்திலேயே விடைகளை நிரப்பி அனுப்ப வேண்டிய இறுதித் திகதி - 2017.01.30
சரியான விடைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் மூவருக்கு தலா ரூ300 பரிசாக வழங்கி வைக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரக்கத்தின் ஆண்டை முன்னிட்டு அலை ஓசை கலைத்தொடர்பகம் நடாத்திய நவீன நாடகப் போட்டியில் சிறப்பாற்றல் பரிசில்களை வென்றோர்





**சிறந்த நடிகர்:**
செல்வன். அற்புதராதா டிரோன்
அற்புத குழந்தை யேசு ஆலயம். உவர்மலை

**சிறந்த நடிகை:**
திருமதி. சக்திராஜா யூடித் லோஜினி
புனித லூர்து அன்னை திருத்தலம். பாலையூற்று



**சிறந்த பிரதி ஆக்கம்:**
திரு. நந்தசேன சுரேஸ்குமார்
புனித லூர்து அன்னை திருத்தலம். பாலையூற்று



**சிறந்த இயக்குனர்:**
திரு. ஆனந்தரமணன்
இறை இரக்கத் திருத்தலம். அலஸ்தோட்டம்



## இப்போட்டிகளிலும் விழாவிலும் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்

**அலை ஓசை இயக்குனர்:**
வண. றொஹான் பேர்னாட்
அலை ஓசை கலைத் தொடர்பகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன நாடகப் போட்டியும் விழாவும் - 2016

இரக்கத்தின் ஆண்டை முன்னிட்டு அலை ஓசை கலைத் தொடர்பகத்தினால் திருகோணமலை மறை மாவட்ட ரீதியாக ஒழுங்கு செய்யப்பட்ட நவீன நாடகப் போட்டிகளும் விழாவும் திருகோணமலை புனித ஜோசப் கல்லூரி கலையரங்கில் கடந்த 2016.11.10 ம் திகதி நடைபெற்றது.

அதிவண. ஆயர் கலாநிதி நோயல் இம்மானுவல் ஆண்டகை பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இவ்விழாவில் பேராலயப் பங்கு, குவாடலுபே பங்கு, உவர்மலைப் பங்கு, பாலையூற்றுப் பங்கு, அன்புவெளிபுரம் துணைப் பங்கு மற்றும் அலஸ்தோட்டப் பங்கு ஆகியன இப் போட்டியில் பங்குபற்றியிருந்தன.



முதலாமிடம் :
புனித லூர்து அன்னை திருத்தலம்
பாலையூற்று



இரண்டாமிடம் :
இறையிரக்கத் திருத்தலம்
அலஸ்தோட்டம்



மூன்றாமிடம் :
தூய சதாசகாயமாதா ஆலயம்
அன்புவெளிபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org